விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 23 சனிக்கிழமை (07.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

## எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில்
## யாழ்.பல்கலைக்கழகத்தின் 32-வது பட்டமளிப்பு விழா

### 2,151 பேர் பட்டம் பெறுகின்றனர்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைகழகத தின் 32ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்வில் இவ் வருடம் 2 ஆயி

24ஆம் பக்கம் பார்க்க....

## அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த நீதிமன்றம் இடைக்காலத்தடை!

### பொது எதிரணியின் போராட்டம் சிக்கலில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ தலைமையில் பொது எதிரணியால் இன்றைய தினம் அம்பாந்தோட்டையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய நேற்று தொடக்கம் எதிர்வரும் 14

23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர் கோரிக்கைகளை புறந்தள்ளினால்
# புதிய அரசியலமைப்பை நாம் நிராகரிப்போம்!

## த.தே.கூ ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டால் அந்த அரசியலமைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கும் என நேற்றையதினம் நடைபெற்ற த.தே.கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (23-ம் பக்.)



## பொருத்து வீட்டுக்கு 2,043 பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 43 பேர் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார்கள் என தெரிவித்த யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பொருத்துவீட்டை பெற்றுக்கொள்ளாவிட்டால் கல்வீடு வழுங்கப்படாது என பொதுமக்களிடம் பரப்பப்படும கருத்துக்கள் தவறானவை எனவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## போதுக்கல்லறை 6பேருக்கு பிணை

(மல்லாவி)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பொதுக்கல்லறை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர்களின் உறவினர்கள் உள்ளிட்ட 6பேருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா தலா 50 ஆயிரம் ரூபாய்

23ஆம் பக்கம் பார்க்க....

## 16-ம் திகதி மைத்திரி யாழ்ப்பாணம் வருகை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 16ஆம் திகதி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக, அவர், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4ஆம் திகதி ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....

## ஊடகங்கள் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு!

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினர் ஊடகங்கள் மூலமாக ஆட்சியை கவிழ்க்க முயற்சிக்கின்றனர் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

களனி வராகொடை பிரதேசத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும்

23ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க முடியாது!

### அரசாங்கம் விடாப்பிடி

(கொழும்பு)

எமது நாட்டு நீதிபதிகள் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எனவே போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளை ஈடுபடுத்தப் போவதில்லை என அமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க....



## இந்.மீனவர்கள் 12பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சியை கவிழ்க்க விரும்புகின்றவர்கள் 2020-ம் ஆண்டு வரை காத்திருங்கள்!

### அதுவரை அசைக்க முடியாது என ஜனாதிபதி தேரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கத்தை 2020ஆம் ஆண்டிலேயே மாற்றியமைக்க சந்தர்ப்பம் உண்டு எனதெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,



சிலர் கூறித்திரிவது போன்று நல்லாட்சி அரசாங்கத்தை 2020 ஆம் ஆண்டுவரை அசைக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

கண்டி தொடம்பல மற்றும் ஹல்ஒலுவ பிரதேசத்தை இணை

23ஆம் பக்கம் பார்க்க....

## வாள்வேட்டு சம்பவம் 6பேருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சில்லாலை சாந்தை பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாள்வெட்டு மோதல் சம்பவம் தொடர்பில் ஆறு பேரை இளவாலை பொலிஸார் கைது செய்திருந்த நிலையில் அவர்களை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

# நடப்பாண்டில் யாழ். பல்கலையில் பல்துறைசார் அபிவிருத்திப் பணிகள்

## முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைசார்ந்த அபிவிருத்தி பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் சில வேலைத் திட்டங்கள் முற்றுப்பெற்று மாணவர்களது பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே மேற்படி விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடங்களில் யாழ்.பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைசார்ந்த பீடங்களுக்கான கட்டிட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவற்றைவிட சில பணிகள் இந்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் பிரகாரம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின்படி வவுனியா வளாகத்துக்கான பிரயோக விஞ்ஞான கட்டிடத்தொகுதி, முகாமைத்துவ பீடத்துக்கான கட்டிடத்தொகுதி, பொறியியல் பீடத்துக்கான கட்டிடத்தொகுதி போன்ற வேலைத் திட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இவற்றைவிட மாணவர்களின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில் உடற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் அப் பணிகளானது இம்மாத இறுதியில் முடிவுறவுள்ளது.

இவற்றைவிட புதிய வேலைத் திட்டங்களாக மருத்துவ பீடத்துக்கான கட்டிடத் தொகுதியொன்றும் 700 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளதுடன் அதற்கான மதீப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று யாழ்.பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்துக்கான கட்டிடத்தொகுதியொன்றும் 525 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது. இவற்றைவிட 361 மில்லியன் ரூபாய் இந்திய அரசின் நிதி உதவியுடன் பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீடத்துக்கான கட்டிடத்தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டு அதன் பணிகள் முடிவுறும் நிலையில் காணப்படுகின்றது.

இவற்றைவிட இந்த வருடத்தில் யப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் மிகப் பெரிய நிதி உதவியான 2 ஆயிரத்து 410 மில்லியன் ரூபாய் செலவில் விவசாய பீடத்துக்கான நவீன வசதிகள் அடங்கிய ஆய்வுகூட கட்டிடத்தொகுதி அமைப்பதற்கான திட்டங்களும் கிடைத்துள்ளன.

இந்நிலையில் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதில் இவ் வருடத்தில் நிறைவுறும் கட்டிடத் தொகுதிகள்விரைவில்மாணவர்களதுபாவனைக்காக கையளிக்கப்படவுள்ளன எனவும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரச ரட்ணம் தெரிவித்திருந்தார். (செ-4)



அமரர் யோகராசா மகேஸ்வரி

மலர்வு: 01. 03. 1934 உதிர்வு: 06. 01. 2017

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர்களுள்
ஒருவரும் எமது பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின்
உப தலைவருமான திருமதி வ. பத்மானந்தன்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி யோகராசா மகேஸ்வரி அவர்கள்
06.01.2017 அன்று அமரத்துவம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும்
தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# ஆசிரியையால் தண்டிக்கப்பட்ட மாணவி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் ஆசிரியையால் தண்டிக்கப்பட்ட தரம் 6 மாணவி சுவாசச் சிரமத்துக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.கோண்டாவிலில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 6 இல் கல்வி பயிலும் மேற்படி மாணவியே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மூன்று நாட்களிற்கு முன்னரே குறித்த பாடசாலையில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரியவருகின்றது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சா த. குருகுலராசா எதிர்கட்சித் தலைவர் எஸ்.தவராசா மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள உடனடியாக விசாரணைக்குக் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவியை வடமாகாண எதிர்க்கட்தித்தலைவர் எஸ். தவராசா வைத்தியசாலை சென்று நேரில் பார்வையிட்டு இச்சம்பவம் தொடர்பாக விசாரித்துமுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகப் மாணவியின் பெற்றோர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)


### வாடகைக்கு

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அரசடி வீதியில் கடைகள், களஞ்சிய அறைகளுடன் உடன் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 9050 319

(7406)

### கோழி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் (கல்பேட்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன், நல்லூர்

(C-7117)


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 - 03 - 1959 | 10 - 12 - 2016 |

## க.சு. சந்தரலிங்கம்

கடந்த 10.12.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் க.சு. சந்திரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 09.01.2017 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்று மதியம் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை. (7391) - குடும்பத்தினர்



# இணுவில் திருப்பதி

### அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய சுவர்க்கவாசல் ஏகாதசி உற்சவ

### அழைப்பிதழ் பத்திரிகை - 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 5.30 மணிக்கு | வேதபாராஜண சமர்ப்பணம் |
| காலை 5.40 மணிக்கு | சுவர்க்கவாசல் திறப்பு |
| காலை 6.30 மணிக்கு | திருக்கைத்தல சேவை உற்சவ கருவறையில் இருந்து புறப்பாடு |
| காலை 9.00 மணிக்கு | மகா திருமஞ்சனம் (அபிஷேகம்) |
| ந.ப 12.00 மணிக்கு | அன்னதானம் |
| பி.ப 7.00 மணிக்கு | வசந்தமண்டப பூசை பிருந்தாகான நாத சமர்ப்பணம் |
| இரவு 11.00 மணிக்கு | அபிஷேகம் |
| நள்ளிரவு 12.00 மணிக்கு | விசேட பூஜை |

**09.01.2017 திங்கட்கிழமை**

அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்த அபிஷேகம் (தீர்த்தவாரி)
காலை 6.00 மணிக்கு - பாறணை - அன்னதானம்

காலை 11.00 மணி மற்றும் இரவு 7.30 மணிக்கு பிருந்தாகான நாத சமர்ப்பணம்

(7407)

தொ.இல:-021 224 2300 ஆலய தர்மகர்த்தா

# வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு தேவையில்லை

## நீதியமைச்சர் நிராகரிப்பு

(கொழும்பு)

**உள்நாட்டு விவகாரத்தை தீர்ப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை, விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணை நீதிமன்றத்தைஅமைக்க. நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் உள்ளடக்குவதற்கு நாம் தயாராக இல்லை.

இன்னமும் செயலணியின் அறிக்கையை நான் முழுமையாகப் படிக்கவில்லை.

ஆனால் அனைத்துலக நீதிபதிகளை உள்ளடக்குவதில்லை என்ற தெளிவான நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளது.

வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணையில் இணைப்பதற்கு அரசியலமைப்பில் இடமில்லை.

அதைவிட அவ்வாறு வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்து எமது நீதிபதிகளின் தரத்தைக் குறைத்து விட முடியாது.

உலகின் எந்த நாட்டு நீதிபதிகளையும் விட எந்த வகையிலும் எமது நாட்டு நீதிபதிகள் குறைவானவர்கள் அல்ல.

வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு எமது பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியம் இல்லை.

அதனை நோக்கி நாம் செல்லவும்மாட்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஐ.தே.க. எம்.பிக்கள் இன்று கட்டாயம் அம்பாந்தோட்டைக்கு வரவேண்டும்

## பிரதமர் ரணில் உத்தரவு

(கொழும்பு)

15 ஆயிரம் ஏக்கர் காணிகளில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிக்கும் முதலீட்டு வலயத்திற்கான திறப்பு விழாவிற்காக இன்று 7 ஆம் திகதி அனைத்து ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்டாயம் அம்பாந்தோட்டைக்கு வருகை தர வரவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அம்பாந்தோட்டை விவகாரம் தொடர்பில் தவறான செய்திகள் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்ற நிலையில் இது தொடர்பாக மக்கள் மத்தியில் உண்மை நிலவரத்தை தெளிவுபடுத்தும் நோக்கில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தும் விசேட கூட்டம், நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அத்துடன் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுக்கு தெளிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் போது அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் முதலீட்டு வலயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று 7 ஆம் திகதி அம்பாந்தோட்டைக்கு கட்டாயம் வருகைதர வேண்டும் என உத்தரவிட்டதாக அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வின்போது ஊடகவியலாளர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-3)

# கலப்பு விசாரணைக்கு பரிந்துரைத்தது ஏன்?

## கலந்தாய்வு செயலணி விளக்கம்




(கொழும்பு)

பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை கொள்ளாததாலும், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிபுணத்துவம் உள்நாட்டில் இல்லை என்பதாலுமே கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு பரிந்துரைத்துள்ளதாக நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணி தெரிவித்துள்ளது.

மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான 11 பேர் கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கை அரசாங்கத்திடம் கடந்த 3 ஆம் திகதி கையளிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பில் நடத்தப்பட்டது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் செயலணியின் தலைவர் மனோரி முத்தெட்டுவேகம, செயலர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி கமீலா சமரசிங்க, கலாநிதி பர்ஸானா ஹனீபா, மீராக் ரஹீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை கொள்ளாததாலும், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிபுணத்துவம் உள்நாட்டில் இல்லை என்பதாலுமே கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு பரிந்துரைத்துள்ளதாக செயலணியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரமன்றி தெற்கில் பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் கூட தடயவியல் விசாரணை போன்றவற்றில் அனைத்துலக நிபுணர்கள் அல்லது விசாரணையாளர்கள் இடம்பெறுவதை விரும்புவதாகவும் செயலணி உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-3)

# ஊடகச் சுதந்திரம்; தராதரம் பற்றி கருத்துக்களை பெறும் காலம் நீடிப்பு

ஊடகச் சுதந்திரம், தராதரம் என்பன பற்றி மக்களின் கருத்துக்களையும் யோசனைகளையும்பெற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினத்துடன் இது முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த கால எல்லை எதிர் வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்திலான ஊடக கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஊடக சுதந்திரத்தையும் தராதரத்தையும் உறுதிப்படுத்துவது இதன் நோக்கமாகும். மதத்தலைவர்களின் கருத்துக்களும் யோசனைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

கருத்துக்களையும் யோசனைகளையும் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். முகவரி பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இலக்கம் 163, பொல்ஹேன்கொட, நாரஹேன்பிட்டி என்பதாகும். 0112514853 என்ற பக்ஸ் இலக்கத்திற்கும் கருத்துக்களையும் யோசனைகளையும் முன் வைக்கலாம். ranga Shdgi.gov.lk மின் அஞ்சல் மூலமாகவும் அனுப்பிவைக்க முடியும். (இ-9)

# மாணவிக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் வைத்து தாக்கப்பட்ட மாணவியின் கல்வி மேம்பாட்டிற்காக கைத்தொழில் வர்த்தக சங்கமும் சாவகச்சேரி லயன் கழகமும் இணைந்து மாணவிக்கும் அவரது சகோதரிகளுக்கும் மாதாந்த உதவிப் பணமாக ரூபா ஆயிரமும் கல்விமேம்பாட்டிற்கென கற்றல் உபகரணங்களையும் நேற்று வழங்கினர். (இ-7)

# அம்பாந்தோட்டையில் அபிவிருத்தித் திட்டங்களை அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப் போவதில்லை

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை எப்படியான அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப் போவதில்லை என அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகில் உள்ள காணிகள் விற்பனை செய்யப்படமாட்டாது. அந்த காணிகள் குத்தகைக்கு மட்டுமே வழங்கப்படும்.

எனினும் குறுகிய அரசியல் நோக்கத்துடன் உள்ள அரசியல்வாதிகளும் அதிகார ஆசை கொண்டவர்களும் மக்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர் எனவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (இ-3)

# இங்கிலாந்துக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடுகிறது. இதற்கான இந்திய அணி தான் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சகலதுறை ஆட்டக்காரரான யுவராஜ் சிங்கிற்கு ஒருநாள் மற்றும் இருபது - 20 அணியில் இடமளிக்கப்பட்டுள்ளது.

ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், மணீஷ் பாண்டே, ஆஷிஷ் நெஹ்ரா உள்ளிட்டோர் ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளனர். ரோஹித்சர்மா 2 அணியிலும் இல்லை.

இருபது - 20 அணியில் இளம் அதிரடி வீரரான ரிஷாபந் பந்த்க்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் மற்றும் இருபது - 20 போட்டிகளின் தலைவர் பதவியில் இருந்து தோனி விலகியதால், விராட் ஹோலி அணியை வழி நடத்துகிறார்.

**இருபது - 20 இந்திய அணி**

லோகேஷ் ராகுல், மன்தீப் சிங், விராட் ஹோலி, டோனி, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ரிஷாப் பந்த், ஹார்டிக் பாண்டியா, ரவிசந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, சாஹல், மணீஷ் பாண்டே, ஜஸ்பிரீட் பும்ரா, புவனேஷ்வர் குமார், ஆஷிஷ் நெஹ்ரா.

**ஒருநாள் இந்திய அணி**

லோகேஷ் ராகுல், ஷிகார் தவான், விராட் ஹோலி, டோனி, மணீஷ் பாண்டே, கேதர் ஜாதவ், யுவராஜ் சிங், ஹார்டிக் பாண்டியா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, ஜஸ்பிரீட் பும்ரா, புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ். (க)

## ஆஸி பிக் பாஷ் தொடரில் இலங்கை வீரர் பெரேரா

அவுஸ்திரேலியாவின் இருபது - 20 லீக் தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் திசாரா பெரேரா மற்றும் இங்கிலாந்து வீரர் டைமல் மில்ஸ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் இருபது - 20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இடம்பெற்றுள்ள மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணியில் மேற்கிந்திய தீவு அணியின் பிரபல இருபது - 20 வீரரான வெயின் பிராவோ இடம்பிடித்திருந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன் விளையாடும்போது அவரது தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் இந்த தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி இலங்கை அணியின் முன்னணி சகலதுறை வீரர் திசாரா பெரேரா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேபோல்பிரிஸ்பேன்ஹீட்அணியில் இடம்பிடித்திருந்த சாமுவேல் பத்ரி நீக்கப்பட்டு இங்கிலாந்து நாட்டின்வேகப்பந்து வீச்சாளரான டைமல் மில்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். (க)

## தலைமையை ஏற்றார் விராட் கோலி



மகேந்திர சிங் தோனியின் பதவி விலகலையடுத்து, இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவுள்ள ஒரு நாள் மற்றும் இருபதுக்கு - 20 போட்டிகளுக்கு அணித்தலைவராக விராட் கோலியை தேர்வாளர்கள் தெரிவுசெய்துள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இந்திய அணிக்கு கோலி தலைமை தாங்கவுள்ளார்.

இதேவேளை, நீண்ட நாட்களாக அணியில் இடம்பெற்றிராத சகலதுறை ஆட்டக்காரர் யுவராஜ் சிங் மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட காலத்தின் பின் மகேந்திர சிங் தோனி தலைவராக இல்லாமல சாதாரண வீரராக விளையாடவிருக்கும் தொடராக இது அமையவுள்ளது. (க)

# கோசின் முன்ரோ சதம்

# வங்கப் புலிகளை வீழ்த்தி தொடரை வென்றது நியூசிலாந்து

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2-வது இருபது - 20 போட்டியில் நியூசிலாந்து அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து - பங்காளதேஷ் அணிகள் மோதும் 2-வது இருபது - 20 போட்டி நேற்று பேஓவலில் நடந்தது. முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 195 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி வீரர் கோசின் முன்ரோ 52 பந்தில் சதம் அடித்து அசத்தினார். அவர் 101 ஓட்டங்கள் எடுத்து (54 பந்து 7 பவுண்டரி, 7 சிக்சர்) ஆட்டம் இழந்தார்.

பின்னர் 196 ஓட்டங்கள் என்ற இலக்குடன் விளையாடிய பங்காளதேஷ் அணி நியூசிலாந்தின் அபார பந்து வீச்சில் திணறியது. அந்த அணி 18.1 ஓவரில் 148 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

3 போட்டி கொண்ட இருபது - 20 தொடரை நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. முதல் போட்டியிலும் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது.

3-வது மற்றும் கடைசி இருபது - 20 போட்டி நாளை நடைபெறவுள்ளது. (க)






## நான் நாட்டிற்காகவே விளையாடினேன் சாதனைக்காக அல்ல : யூனிஸ்கான்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என்னை எப்படி விரும் புகிறது என்பதை பொறுத்துதான் என்னுடைய 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல் அமைந்துள்ளது என யூனிஸ்கான் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் அனுபவ வீரர்களான யூனிஸ்கான் மற்றும் மிஸ்பா உல் ஹக் ஆகியோர் விளையாடி வருகின்றனர்.

யூனிஸ்கானுக்கு 39 வயதாகிறது. தற்போது பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் யூனிஸ்கான் மிகவும் மோசமாக விளையாடினார். இதனால் அவர் ஓய்வு பெறுவாரா? என்ற கேள்வி எழும்பியது.

ஆனால் சிட்னியில் நடைபெற்று வரும் போட்டியில் முதல் இன்னிங்சில் 175 ஓட்டங்கள் குவித்தார். இது அவரது 34-வது சதமாகும். மேலும், அவுஸ்திரேலிய மண்ணில் முதல் சதத்தை பதிவு செய்துள்ளார். அவர 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல கல்லை எட்ட இன்னும் 36 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்படுகி றது.

2-வது இன்னிங்சில் இந்த ஓட்டத்தை எடுக்காவிடில் மற்றொரு தொடருக்காக யூனிஸ்கான் காத திருக்க வேண்டும். ஆகையால், 10 ஆயிரம் ஓட்டங்கள் என்பது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை பொறுத்துதான் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து யூனிஸ்கான் கூறுகையில் "பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என்ன விரும்புகிறதோ, அதைப் பொறுத்துதான் நான் அணியில் இடம்பெறுவது சார்ந் திருக்கும். நான் 10 ஆயிரம் ஓட்டங் கள் என்ற மைல்கல்லை எட்டும் முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையின் விளிம்பில் உள்ளேன். தற்போது இதுபற்றிய விவாதம் அல்ல.

பாகிஸ்தான் வீரர்கள் யாரும் இந்த அரிய சாதனையை நிகழ்த்தவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே. இது அனைத்தும் அணி மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆகியவற்றைச் சார்ந்துதான் இருக்கிறது.

நான் பாகிஸ்தான் நாட்டின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று நினைக்கவில்லை. அந்த வரிசையில் ஜாவேத் மியான்தத், ஜாகீர் அப்பாஸ் போன்றோர் உள்ளனர். மேலும், ஏராளமான சிறந்த வீரர்கள் உள்ளனர். அதில் இன்சமாம் உல் ஹக்கும் அடங்குவார். நான் எப்போதும் அணிக்காகவும், நாட்டிற்காகவும் தான் விளையாடினேன் என்று என்னுடைய ரசிகர்களுக்கும் என்னை விமர்சனம் செய்தவர்களுக்கும் தெரிய வேண்டும். இதுதான் எனக்கு முக்கியமானது" என்றார். (க)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் பாகிஸ்தானுக்கு 465 வெற்றி இலக்கு

சிட்னியில் நடைபெற்று வரும் 3-வது டெஸ்டில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 465 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்துள்ளது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்பிற்கு 538 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் 315 ஓட்டங்களில் சுருண்டது. அவுஸ்திரேலியாவை விட 223 ஓட்டங்கள் பின தங்கியதால் பாகிஸ்தான் அணி பாலோ - ஒன் ஆனது. ஆனால் பாலோ - ஒன் கொடுக்காமல் அவுஸ்திரேலியா 2-வது இன்னிங்சை தொடங்கியது.

வோனர் அதிரடியாக விளையாடி 27 பந்தில் 55 ஓட்டங்களும், ஸ்மித் 43 பந்தில் 59 ஓட்டங்களும் குவித் தனர். கவாஜா மற்றும் ஹேண்ட்ஸ் காம்ப் ஆகியோர் ஆட்டம் இழக்காமல் முறையே 79 மற்றும் 40 ஓட்டங்கள் அடிக்க அவுஸ்திரேலியா அணி 32 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டங்கள குவித்து 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

முதல் இன்னிங்சில் 223 ஓட்டங்கள முன்னிலைப் பெற்றிருந்ததால், அவுஸ்திரேலியா ஒட்டுமொத்தமாக 464 ஓட்டங்கள் பாகிஸ்தானுடன் அதிகம் பெற்றது. இதனால் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 465 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இமாலய இலக்கை நோக்கி பாகிஸ்தான் 2-வது இன்னிங்சை தொடங்கியது. அசார் அலி, ஷர்ஜீல் கான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 51 ஓட்டங்களாக இருக்கும்போது பாகிஸ்தான் அணி முதல் விக்கெட்டை இழந்தது.


ஷர்ஜீல் கான் 38 பந்தில் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லயன் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன் பின் நைட்வாட்ச்மேனாக யாசீர் ஷா களம் இறங்கினார். பாகிஸ்தான் அணி 4-வது நாள் ஆட்டம் முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 55ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இன்னும் 410 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் பாகிஸ்தான் கைவசம் 9 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்று ஒருநாள் மட்டும் மீதமுள்ளது. கடைசிநாளில் 410 ஓட்டங்கள என்பது மிகக்கடினம். இதனால் பாகிஸ்தான் தோல்வி அல்லது சமநிலை இரண்டில் எதாவது ஒரு முடிவை எட்டவே வாய்ப்புள்ளது. (க)






அதிமேதகு மைத்திரிபால சிறிசேன
இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின்
சனாதிபதியும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்
நல்லிணக்க அமைச்சரும்



கௌரவ ரணில் விக்கிரமசிங்க
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பிரதம மந்திரி



திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
அம்மையார் முன்னாள் சனாதிபதியும் தேசிய
ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க
அலுவலகத்தின் தலைவரும்



கௌரவ ஏ.எச்.எம். பௌசி
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க
இராஜாங்க அமைச்சர்



திரு. வே. சிவஞானசோதி
செயலாளர்
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்
நல்லிணக்க அமைச்சு

# தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம்

## 2017 சனவரி 8 - 14 வரை

நல்லிணக்கத்தை நோக்கிய எமது பயணம்...

◆ மக்கள் பல சமயங்கள், பல இனங்கள், பல கலாசாரங்கள் மற்றும் பல பிரதேசங்கள் என்பவற்றின் பல்வகைமைகளை நன்குணர்ந்து, அவற்றுக்கு மதிப்பளித்து, நாம் "இலங்கையர்" எனும் தனித்துவத்தை பேணிப்பாதுகாத்து, அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கின்ற பிரதான எண்ணக்கருவினூடாக ஒருமைப்பாடு, நல்லிணக்கம், வலிமைமிக்க, வளமான தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமிடுவோம்.

"வேற்றுமையில் ஒற்றுமை"

◆ தேசத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்ப வேண்டியது மிகப் பிரதானமாகும்.

பிரதான குறிப்புகள்

◆ நாம் வளம்கொழிக்கும் இலங்கைத் திருநாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கியம், சமாதானம், நல்லிணக்கம், ஒற்றுமை என்பவற்றை விருத்தி செய்வதில் முகவர்களாவும், தூதுவர்களாவும் பங்காற்றுவோம்.

◆ அனைத்து இலங்கையர்களுக்கும் உளப்பூர்வமாகவும், மனப்பூர்வமாகவும், செயற்பாடுகளினாலும் ஆக்கபூர்வமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அழைப்பு விடுப்போம்.

◆ இதுவரை நாம் பெற்ற அடைவுகளை நினைவுகூர்ந்து, நிலைபேறான நல்லிணக்கத்தை தோற்றுவிப்பதற்கான காலம் மலர்ந்துள்ளது.

**தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு**
**இல. 34, நாரஹேன்பிட்டி வீதி, நாவலை.**

# அன்னையின் அறக்கொடை விழா



(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 92 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா இன்று 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறும்.

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி.ஜெயசிங்கம் புஸ்பலதா தம்பதியர், சிறப்பு விருந்தினராக இலங்கை சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

அன்னையின் பிறந்த நாள் அறக்கொடை வழங்கும் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பெண்கள் வைத்திய பிரிவு சார்பில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை சார்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி யோகேஸ்வரன்திவாகரன் ஆகியோரும் பெற்றுக்கொள்வர்.

மேலும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரத்தில் 2017 இல் கல்வி கற்கும் திறமையின் உச்சம் தேவைப்படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற் கொண்டு நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்கல் இடம்பெறும்.

பாடசாலைகள் சார்பில் இதனை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் பெற்றுக் கொள்வார். மேலும் இந்நிகழ்வில் 2017 ஆம் ஆண்டிற்கான சிவத்தமிழ் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இதில் வைத்திய நிபுணர் சேனாதிராஜா ஆனந்தராஜா, நாதஸ்வர வித்துவான் எம்.பி. பாலகிருஷ்ணன், பொன்னாலை பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், இளைப்பாறிய ஆசிரியை பண்டிதை திருமதி மகாதேவி பத்மநாதன் போன்ற சான்றோர்கள் விருது பெறுவர். (இ-3)

# பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும்

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரால் 2016.08.03 ஆம் திகதி வடமாகாண சபை இணையத்தளம் மூலமாக கோரப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாக வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ்மொழி மூலம்)- 2016(II) இற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் தகுதி பெற்றவர்கள் 2016.12.18 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். அவர்களில் தகைமை பெற்ற 779 விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 16.01.2017, 17.01.2017, 18.01.2017, 19.01.2017 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றைய தினம் தவறாது சமூகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

செயலாளர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு , வடக்கு மாகாணம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள 779 விண்ணப்பதாரர்களுக்குமான நேர்முகத்தேர்வு அழைப்புக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களின் பெயர் விபரம், நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்ப்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள் என்பவற்றை வடமாகாண சபை இணையத்தளம் www. np .gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் எஸ்.ரவிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைவர்-மு.ஜெகதேவன், உபதலைவர்-பா.இரகுநாதன், செயலாளர்-பா.மன்மதகுமார், உபசெயலாளர்-திருமதி நே.நாகேஸ்வரி, பொருளாளர் சு.நடராசா, செயற்குழு உறுப்பினர்களாக க.ரவிகரன், ந.நகுலேஸ், பெ.ஆறுமுகநாதன், செ. சுந்தரலிங்கம், கா. இராமநாதன், ந. சிறிதாஸ், வ. செந்தில்நேசன், ஜெ.ஜெலபிரதாப், கணக்காய்வாளர்-எஸ்.டயானந்தன், போஷகர்-த.வதனரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)




## தையல் இயந்திரம் வழங்கல்



வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து புவனேஸ்வரன் வாசுதேவன் என்பவருக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் ஒன்று நேற்றுக் காலை வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. (இ-60)

# வடக்கு-கிழக்கு தந்திரோபாய ஆய்வு மாகாண மட்ட கருத்தறியும் அமர்வு

உலக வங்கி இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலைபேறான அபிவிருத்தியை மையமாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைப்பதற்காக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாகாண அபிவிருத்தியில் ஆர்வமும் பங்களிப்பும் மேற்கொள்ள விரும்பும் மதப் பெரியார்கள், இளைஞர்கள் ஆகியோரின் கருத்துக்களை அறிவதற்காக உலக வங்கியின் தலைமை அலுவலக மற்றும் இலங்கை வதிவிட நிபுணர்கள் மாகாணமட்ட கருத்தறியும் அமர்வு ஒன்று எதிர்வரும் 16.01.2017 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தமர்வில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் உலக வங்கியின் இலங்கைக்கான www.worldbank.org எனும இணையத்தளமூடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-3-9)

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 26 ஆவது பொதுக்கூட்டம் அண்மையில் வி. முருகதாஸ் தலைமையில் இணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து சிறப்பித்திருந்தார். இக்கூட்டத்தில் நிதி, நிர்வாக, அபிவிருத்தி, செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் 26 ஆவது ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின் 2017ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ரி.தேவானந் (அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்) ,உப தலைவராக வி.முருகதாஸ் (சாந்தீகம்), செயலாளராக வி.ஜி.தங்கவேல் (அறவழிப்போராட்டக்குழு), உப செயலாளராக எஸ்.சேந்தினி (பெண்களின் மாற்றத்திற்கான செயற்பாட்டு வலையமைப்பு), பொருளாளராக வி. கேசவன் (காருண்யா பவுண்டேசன்), அங்கத்தவர்களாக திரும்தி. சரோஜா சிவச்சந்திரன் (மகளிர் அபிவிருத்தி நிலையம்), செல்வி.பி.ஜமுனாதேவி (வட இலங்கை சர்வோதயம்), எஸ். திருக்குமரன் (ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்), கே.பரம்சோதி (வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்) ஆகியோரும் உள்ளக கணக்காய் வாளராக திருமதி எஸ். சுமதி (ஆறுதல்), பத்திராதிபராக ஈ. பிரபாகரன் (தியாகி அறக் கொடை நிலையம்) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

## நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று (07.01.2017) தொடக்கம் 13.01.2017 வரை நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. அத்தோடு 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்களை திறந்து மக்களுக்கு சேவையாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு 14.01.2017 தொடக்கம் நேரக்கட்டுப்பாடு வழமை போல் அமுலில் இருக்கும். இதை மீறும் அங்கத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

## இலவச தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 2017 ஆம் அண்டு தை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்கைநெறிகளாவன, வீட்டு மின்னிணைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், விவ்சாய இயந்திர உபகரண திருத்துநர் ஆகும். இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல. 12, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது பண்ணத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 12.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

◆ ◆ ◆ ◆ ◆ ◆

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 2017 ஆம் அண்டு தை மாதம் ஆரம்பிக்கவுள்ளன.

கற்கைநெறிகளாவன, காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) ,மரவேலை தொழில் நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர் , மின்னிணைப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், அறை ஊழியர், அலுமினியம் பொருத்துநர், மோட்டார்சைக்கிள் திருத்துநர் ஆகும். இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி ,யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச் சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 12.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விசேட பயிற்சி நெறியும் ஒன்றுகூடல் நிகழ்வும்

கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் சகல தொண்டர்களுக்குமான விசேட பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். அத்துடன் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வானது நாளை 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். சகல தொண்டர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வீதி நாடகங்கள் முன்னிலையில்

## நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் அதிகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வீதி நாடகங்கள் முன்னிலை வகிப்பதாக நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறி தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்களுக்கான வீதி நாடகப்பயிற்சிப்பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் போதைப்பொருட் பாவனையில இன்று எம் தேசம் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இன்றைய இளம் சந்ததியினரை நாளைய தலைவர்களாக உருவாக்கி இவ்வுலகிற்கு ஒப்படைக்க வேணடிய இன்றியமையாத கடப்பாடு எல்லோருக்குமே உண்டு. மாணவர்களை நல்வழிப்படுத்த சிறந்த பெறு பேறுகளைப் பெற்று நற்பிரஜைகளாகத் திகழ கல்வியைக் கருத்துடன் கற்று வந்தால் பல நன்மை கிடைக்கும்.

போதையற்ற ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பவும் இலவசக் கல்வியை முழுமையாகப் பெற்றுக்கொள்ளவும் கிராமம் கிராமமாகச்சென்று மக்களிடையே விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும் எனவும் தெரி வித்தார். க.இ.கமலநாதனால் வீதி நாடகப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டு கலைஞர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. (இ-3)

# உதய கம்மன்பிலவுக்கு எதிராக சாட்சியமளிக்க அவுஸ்திரேலிய பிரஜைகளுக்கு அழைப்பாணை

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிக்க ஆஜராகுமாறு அவுஸ்திரேலிய தம்பதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.



போலி அட்டர்னி அனுமதிப்பத்திரத்தை தயாரித்து அவுஸ்திரேலிய பிரஜை ஒருவருக்கு சொந்தமான நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபாவை மோசடி செய்துள்ளதாக கம்மன்பிலவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முதலாம் மற்றும் இரண்டாம் சாட்சியாளர்களான அவுஸ்திரேலிய தம்பதியினர் சாட்சியமளிப்பதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எல்.குருசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த அழைப்பாணை நீதியமைச்சின் ஊடாக அவுஸ்திரேலிய தூதரகம் மூலம் அனுப்பி வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)


**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

**021 222 8117, 077 900 877**

(தினமும் காலை 9.00 - 1.00)

வவுனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# 7 ஆவது ஆண்டு நினைவு தினம்

பிறப்பு 27.02.1969 இறப்பு 25.12.2009

## திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி



அன்பால் அரவணைத்து
பண்பாய் கதைகள் சொல்லி
கனிவாய்ப் பேசிடும்
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஏழேழு ஜென்மங்கள் ஆனாலும்
உம் நினைவினால் எம் விழிகளில்
சொறியும் கண்ணீரை நிறுத்த
முடியாது தவிக்கின்றோம்.
உமது ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அக்ஷிராபவன், ஆவரங்கால்.

மகள்:- ராஜராஜன்-ஜர்திகா, மகன்:- வி.ஜதீபன்
தாய்:- சிதம்பரம், பேத்திமார்:- அக்ஷீரா, அஷ்மீரா

# புதிய அரசியலமைப்பு தொடர்பிலான சபை விவாதம் ஒத்திவைப்பு

புதிய அரசியலமைப்பு தொடர்பில் இம்மாதம் 09, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடத்துவதற்கு இருந்த விவாதத்தைக் கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பிலான விவாதத்துக்காக ஏற்கனவே பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இத்தினங்கள் வேறு நாட்களுககு மாற்றப்படுவதற்காக, குறித்த தினங்களில் தீர்மானிக்கப் பட்டிருந்த கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியலமைப்பு சபை செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உத்தேச அரசியலமைப்பு தொடர்பிலான விவாதம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்தின் பின்னர் சபாநாயகரினால், சபைக்கு இந்த தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் பின்லேடன் மகன்-அமெ. அறிவிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் பின்லேடன் மகன் பெயர் இடம் பெற்றுள்ளது.

சர்வதேச பயங்கரவாதியாக திகழ்ந்தவன் பின்லேடன். இவன் அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவனாகஇருந்தவன.இவன் உலக நாடுகளை அச்சுறுத்தி வந்தான்.

பாகிஸ்தானில் அயோதாபாத்தில் பதுங்கி இருந்த அவனை கடந்த 2011ஆம் ஆண்டு அமெரிக்க அதிரடிப்படை சுட்டுக்கொன்றது. அதை தொடர்ந்து அய்மான் அல்-ஜவாகிரி அல்- கொய்தா தலைவனாக பொறுப்பேற்றான்.

சுட்டுக்கொல்லப்பட்ட பின்லேடனுக்கு 4 மனைவிகள் உள்ளனர். அதே போன்று பல மகன்கள் இருக்கின்றனர். அவர்களில் ஹம்சாவும் ஒருவன். தற்போது இவனுக்கு 20 வயதாகிறது.

ஹம்சா அயோதாபாத்தில் தனது தந்தை பின்லேடன், தாயார் ஹைறியா சபருடன் தங்கியிருந்தான். ஆனால் பின்லேடன் கொல்லப்பட்ட போது அங்கு அவன இல்லை. தலைமறைவாகி தப்பிவிட்டான.

இவர் பின்லேடனுக்கு பிடித்தமான மகன் ஆவான். அவனுக்கு பிறகு ஹம்சா தான் அல்கொய்தா இயக்க தலைவர் என கூறி வந்தனர். அதே போன்று பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு அமெரிக்காவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் எதிராக ஹம்சா குரல் கொடுத்தான்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் தலைநகரங்களில் தாக்குதல் நடத்தும்படி அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு உத்தரவிட்டான. கடந்த 2015ஆம் ஆண்டில் அவனது தகவல் அடங்கிய காணொலி வெளியிடப்பட்டது.

அதில் காபூல், பக்தாத் மற்றும் காஷாவில் அல் கொய்தா தீவிரவாதிகள் புனித போர் நடத்தி வருவதாக கூறியிருந்தான். வோஷிங்டன், லண்டன், பாரிஸ், டெல் அவில் உள்ளிட்ட நகரங்களிலும் அது நடைபெறுவதாகவும் தாக்குதல் தொடரும் என கூறியிருந்தான்.

இந்த நிலையில் அண்மையில் அமெரிக்கா சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலை வெளியிட்டது. அதில் ஹம்சா பெயரும் இடம் பெற்றுள்ளது.

எனவே அவனுக்கு அமெரிக்க கம்பெனிகளில் அவனுடன் கூடிய வர்த்தகங்கள் தடை செய்யப்பட்டன. மேலும அங்குள்ள அவனது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

# பரிசில் நாள் விழா நாளை

தச்சன் தோப்பு கோவிலடி மேற்கு கந்தையா கனகம்மா நிதிய பரிசில் நாள் விழா நாளை 8அம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம்பெறும்.

நிதிய உறுப்பினர் கந்தையா அருளானந்தம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட கலை, கலாசார உத்தியோகத்தர் இரத்தினம் நித்தியானந்தன், சிறப்பு விருந்தினர்களாக தச்சன்தோப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவர் நடராசா யோகசிங்கம், கௌரவ விருந்தினராக ஓம்கிரிய பாபாஜி ஆரண்யய யோகக் கலை பயிற்றுவிப்பாளர் நல்லதம்பி வீரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)

# இராசி பலன்

07.01.2017

(மார்கழி 23, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
நவமி காலை 7.19 மணிவரை
தசமி பின்னிரவு 5.01 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.39 மணிவரை
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32-11.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது செவ் சுக் | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | |
| | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மீனம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப காரிய பேச்சுக்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மேடம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் சில குறைகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணவரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, சேவையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** மறைமுகப் போட்டிகள் மாறும், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்,மாமன் மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ,புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுவாரஸ்ய மான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் நன்மைகள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

# தமிழகத்தில் ஒரு மாதத்தில் 106 விவசாயிகள் உயிரிழப்பு

## மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்

**(சென்னை)**

**தமிழகத்தில் ஒரே மாதத்தில் 106 விவசாயிகள் உயிரிழந்தது குறித்து 6 வாரங்களுக்குள் விரிவான விளக்கம் அளிக்க வேண்டும் என தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.**

தமிழகத்தில் பருவ மழை பொய்த்து, நீர் நிலைகள் வற்றியதாலும், டெல்டா பாசனத்துக்கான அணைகள் மூடப்பட்டதாலும், திருச்சி, தஞ்சை, நாகை, புதுக்கோட்டை பகுதிகளில் சம்பா சாகுபடியும் காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு, மதுரை, தூத்துக்குடி பகுதிகளில் நெல், மஞ்சள், உளுந்து, மக்காச்சோளம் போன்றவற்றின் விளைச்சலும் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் மாரடைப்பால் உயிரிழப்பதும், சிலர் தற்கொலை செய்துகொள்வதும் நிகழ்ந்து வருகிறது. கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும், 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்தனர். இதுகுறித்து பத்திரிகைகளில் வெளியான செய்திகளின் அடிப்படையில், தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதில், 'தமிழகத்தில் ஒரு மாதததில் 106 விவசாயிகள் பலியானது வருத்தத்துடன் கவனம் செலுத்த வேண்டிய விடயம். ஒரே மாதத்தில், 83 விவசாயிகள் மாரடைப்பால் இறந்ததாக வெளியாகி உள்ள செய்தி கவலை அளிக்கிறது.

இவ்விடயத்தில் மாநில அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது, இதற்கு மேல் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் 6 வாரங்களுக்குள்விரிவான விளக்க அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

விவசாயத் துறை சட்டங்கள், கொள்கைகள் முறையாக அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியம். அரசுத் துறைகளின் திட்டங்கள் செயலாக்கத்தில் போதிய திறமையின்மை, தோல்வி போன்றவையும் விவசாயிகளின் உயிரிழப்புக்கு காரணமாகும்.

பயிர் கருகி விளைச்சல் பாதிப்பது அந்த விவசாயியை பொருளாதார ரீதியாக மட்டும் பாதிப்பதில்லை. கடுமையான மன அழுத்தத்தையும், மன வேதனையையும் ஏற்படுத்திவிடும். இதனால் விவசாயி இயற்கையாக இறந்தாலோ, தற்கொலை செய்து கொண்டாலோ, அந்த குடும்பமே சீர்குலைந்துபோகும்' எனச் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

பாரதச் செய்தி

## எம்.ஜி.ஆர்.நாணயம் வெளியிட வேண்டும்

### பிரதமரிடம் சசிகலா கோரிக்கை



அ.தி.மு.க. பொதுச்செயலாளராக பதவியேற்றுள்ள வி.கே. சசிகலா, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் வழியாக முதல் கோரிக்கை விடுத்துள்ளார்.

சசிகலா எழுதியுள்ள கடிதத்தில், எம்.ஜி.ஆர் பிறந்த நாளை முன்னிட்டு எம்.ஜி.ஆர். நாணயம் மற்றும் அஞ்சல் தலை வெளியிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது பொதுச்செயலாளராக பதவியேற்றுள்ள சசிகலா பிரதமருக்கு விடுக்கும் முதல் கோரிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தமிழக முதல்வர் பன்னீர்செல்வமும், எம்.ஜி.ஆர் .சிறப்பு நாணயம் மற்றும் சிறப்பு அஞ்சல்தலை தொடர்பான அறிவிப்பை விரைவில் வெளியிட வேண்டும் என்று மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் விவசாயிகள் உயிரிழப்பது தொடர் கதையாகி வரும் நிலையில், விவசாயிகள், ஏதிர்க்கட்சி தலைவர் உட்பட பலர் தமிழகத்தை வரட்சி மாநிலமாக அறிவிக்க வலியுறுத்தி போராடி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்.சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அ.தி.மு.க.பொதுச் செயலாளர் சசிகலா அறிக்கை

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலாவெளியிட்டுள்ளஅறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4.1.2017 அன்று நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடி படகுகளை கைப்பற்றிக் கொண்டு, அப்படகுகளில் இருந்த 10 மீனவர்களை சிறை பிடித்துச் சென்றுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 584 படகுகளில் கச்சதீவை ஒட்டியுள்ள இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை விரட்டியடித்து உள்ளனர். அவர்களின் மீன்பிடி வலைகளையும் அறுத்து எறிந்துள்ளனர்.

அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காக அலைகடலில் சொல்லொணா இன்னல்களுக்கு இடையே மீன்பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து துன்புறுத்தி வருவது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## பூரண மதுவிலக்கு; பீஹார் முதல்வருக்கு பிரதமர் மோடி மனம் திறந்து பாராட்டு



'முழு மதுவிலக்கு எனும் சமூகப்பணி' என்று பீஹார் முதல்வரின் பூரண மதுவிலக்கு திட்டத்தை வெகுவாகப் புகழ்ந்தார் பிரதமர் நரேந்திர மோடி.

பாட்னாவில் காந்தி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த பிரகாஷ் பர்வ் கொண்டாட்டங்களில் சீக்கிய பக்தர்களிடம் பேசிய பிரதமர் மோடி நிதிஷ் குமாரின் முழு மதுவிலக்கு அமுலை பாராட்டிப் பேசினார்.

"முன்னோடியான முழு மதுவிலக்கு சமூகப்பணியை மேற்கொண்டதற்காக முதல்வர் நிதிஷ் குமாருக்கு எனது மனம் திறந்த வாழ்த்துக்கள். இது அனைத்து கட்சிகள் மற்றும் பிரிவினரிடையே ஒத்துழைப்புக்காக நிதிஷ் விடுத்துள்ள அழைப்பாகும்.

• அரசு மட்டுமோ அல்லது நிதிஷ் குமார் மட்டுமோ இதனை வெற்றியடையச் செய்யாது, இதற்கு மக்கள் ஒத்துழைப்பு மிக அவசியம். எனினும் இத்தகைய மிகப் பெரிய சமூகப் பணியை மேற்கொண்டதற்காக நான் நிதிஷ் குமாரை மனம் திறந்து பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த விழாவுக்கு நிதிஷ் குமார் தனிப்பட்ட முறையில் கவனம் எடுத்துக் கொண்டு ஏற்பாடுகள் செய்திருக்கிறார் என்பதை நான் அறிகிறேன். இந்த பெரிய விழா வெற்றி பெற அவர் எடுத்துக் கொள்ளும் அக்கறைக்காகவும் அவரை நான் வாழ்த்துகிறேன்" என்றார் மோடி.

இந்தக் கூட்டத்தில் லாலு பிரசாத் யாதவ் மற்றும் அவரது இரு மகன்களும் இருந்தனர். மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்ததை எதிர்க்கட்சி ஐக்கிய ஜனதாதளம். நிதிஷ் குமாரும் மோடியும் ஒருவரையொருவர் கடுமையாக விமர்சனம் செய்தவர்கள்.

ஆனால் மத்திய அரசின் ரூபாய் நோட்டு நடவடிக்கைக்கு நிதிஷ் குமாரிடமிருந்து ஒரு அரிய ஆதரவு கிட்டியதையடுத்து பிரதமர் தற்போது நிதிஷின் 'சமூகப் பணி'யை பாராட்டுவதாக பீஹார் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## மோடி பேசியே மயக்கும் தந்திரமான பேச்சாளர்

பிரதமர் நரேந்திர மோடி பேசியே மயக்கும் தந்திரமான பேச்சாளர் என தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது, 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களைமத்தியஅரசு வாபஸ் பெறப்பட்ட பின் தாங்கள் அணிந்திருக்கும் நகைகள் பற்றிய விபரங்களையும் மத்திய அரசு கேட்க உள்ளதாக ஒரு பேச்சு நிலவுகிறது.

அவ்வாறு நடந்தால்எம்.பிக்கள் அனைவருக்கும் இதுவே கடைசி பதவிக்காலம். இதன் பின் ஒரு போதும் மக்கள் நம்மை தேர்ந்தெடுக்க மாட்டார்கள்.

புனே பொதுக்கூட்டத்தில் தனது அரசியல் வழிகாட்டியாக மோடி என்னை குறிப்பிட்டு பேசினார். அவர் தந்திரமான பேச்சாளர். தன் பேச்சின் மூலம் மக்களிடம் பெரிய எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி விடுவார். இதை நம்பி மக்கள் ஏமாந்து விடுகின்றனர். ரூபாய் நோட்டு விவகாரத்தில் மக்கள் படும் சிரமங்கள் ஏராளம். பிரதமர் மோடி இதை புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016 இல்

# 5 ஆயிரத்து 436 மில்லியன் ரூபாய் நிதி 6,190 அபிவிருத்தி திட்டங்களுக்கு செலவு


(பனிக்கன்குளம்)

**கடந்த 2016ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5953.677 மில்லியன் ரூபா நிதியில் 5436.848 மில்லியன் ரூபா நிதி 2016 இல் முல்லையில் 6 ஆயிரத்து 190 அபிவிருத்தி திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**





நேற்றுக் காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மாவட்டத்தின் சகல திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் ,மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு அவர்களது திணைக்களங்களால் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை தெரிவித்தனர். அந்த வகையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தினூடாக 277 வேலைகளுக்காக 38.72 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 37.3 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஊடாக 163 வேலைகளுக்காக 139.03 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 135.96 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் ஊடாக 4508 வேலைகளுக்காக 1283.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 1184.12 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் ஊடாக 2 வேலைகளு க்காக 36 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 36 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் ஊடாக 46.87 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 46.87 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அதிகாரசபை ஊடாக 5 வேலைகளுக்காக 7.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 5.9 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் ஊடாக 7 வேலைகளுக்காக 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செயயப்பட்டதாகவும் அதில் 0.5 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

திவிநெகும திணைக்களம் ஊடாக 12 வேலைகளுக்காக 405.92 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 405.76 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் காணி பயன்பாட்டுத்திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாக 53 வேலைகளுக்காக 0.65 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 0.61 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் திணைக்களம் ஊடாக 9.09 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 9.09 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஊடாக 24.328 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 20.307 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் ஊடாக 04 வேலைகளுக்காக 29.1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 28.44 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் உலக உணவுத்திட்டம் ஊடாக 5 வேலைகளுக்காக 16.779 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 16.078 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாய திணைக்களம் ஊடாக 66.87 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 66.87 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கால்நடைகள் உற்பத்திகள் சுகாதார திணைக்களம் ஊடாக 43 வேலைகளுக்காக 26.16 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 26.16 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் ஊடாக 31 வேலைகளுக்காக 658.66 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 658.66 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 918 வேலைகளுக்காக 513.13 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 339.83 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

பனை வள அபிவிருத்தி சபை ஊடாக 2 வேலைகளுக்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் ஒரு மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தென்னை அபிவிருத்தி சபை ஊடாக 5 வேலைகளுக்காக 14.04 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட தாகவும் அதில் 13.763 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் திணைக்களம் ஊடாக 8 வேலைகளுக்காக 71.7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 71.7 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார திணைக்களம் ஊடாக 322.49 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 127.2 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக 14 வேலைகளுக்காக 200.59 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 200.59 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் வலயக்கல்வி திணைக்களம் முல்லைத்தீவு ஊடாக 516.25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 516.25 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் வலயக்கல்வி திணைக்களம் துணுக்காய் ஊடாக 357.44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 357.44 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 12 வேலைகளுக்காக 101 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 101 மில்லியன் செலவு செய்யப்ட்டுள்ளதாகவும்

உள்ளூராட்சி திணைக்களம் ஊடாக 101 வேலைகளுக்காக 213.36 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 176.35 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 16 வேலைகளுக்காக 11.9 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 11.9 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 41.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதில் 41.2 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் நீர்வழுங்கல் திணைக்களம் ஊடாக 4 வேலைகளுக்காக 800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் படடதாகவும் அதில் 800 மில்லியன் செலவு செய்ய ப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 6190 வேலைகளுக்காக 5953.677 மில்லியன் ஒதுக்கப்பட்டதாகவும் இதில் 5436.848 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.(2-281)




## சிவநகர் சனசமூக நிலையத் திறப்பு விழா

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட சிவநகர் சனசமூக நிலையத்திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு தலைவர் ச.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளி/பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமலராசா, கௌரவ விருந்தினர்களாக சிவநகர் கிராம சேவை அலுவலர் திருமதி. சா.சுந்தரலிங்கம், கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை அதிபர் ஜ.இராசரத்தினம், சிவநகர் மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர் அ.இரகுபதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் நிதிப்பங்களிப்பின் மூலம் இச்சனசமூக நிலையத்திற்கான மின் இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான உதவியும் வழங்கி வைக்கப்படவுள்ளது. (2-312-254)

## முன்பள்ளி வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு முல்லையில்

(பனிக்கன்குளம்)

கடந்த 30 ஆண்டு காலமாக JRSS நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த முன்பள்ளி வேலைத் திட்டமானது கடந்த டிசெம்பர் 2016 உடன் அதன் பணி நிறைவுக்கு வந்ததைத் தொடர்ந்து அத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளும் விதமாக ஜேசுவிட் நல்லிணக்க ஒருமைப்பாட்டு பணி அமைப்பினரால் இலங்கை பூராகவும் 104 இற்கும் அதிகமான சிறுவர் பாடசாலைகளில் மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி உத்தியோகபூர்வமாக சர்வ மதத்தலைவர்கள் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தில் உள்ள ஞானஒளி முன்பள்ளியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக JRSS நிறுவன இயக்குநர்,காவேரி கலா மன்றத்தின் நிறை வேற்று பணிப்பாளர், முன்பள்ளிகளுக்கான உதவிக்கல்வி பணிப்பாளர் , மதத்தலைவர்கள், JRSS நிறுவன இணைப்பாளர்கள், ஆசிரியர்கள் ,மாணவர்கள் ,பெற்றோர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (2-281)

# புத்தாண்டுப் பலன்கள்

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!



**மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களை செய்து முடிக்கும் விருச்சிக இராசி அன்பர்களே!**

கலைவாணியின் அருளுக்குப் பாத்திரமானவர்கள் நீங்கள். உங்கள் சொல்லைக் கேட்டு நடக்க, உங்களைச் சுற்றி எப்பொழுதுமே ஒரு கூட்டம் இருக்கும். மூளை பலத்தால் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் முதலிடம் வகிப்பீர்கள். நீங்கள் சொல்லும் சொற்கள், வெல்லும் சொற்களாக அமையும். பொதுவாக உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால், மனவலிமை அதிகம் பெற்றிருப்பீர்கள். ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு இருக்கும். நட்பால் நல்ல காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

வாழ்வின் முற்பகுதியை விட, பிற்பாதியில் பெருமைகளைப் பெற்று பிரபலங்களின் வரிசையில் இடம்பிடிக்கும் உங்களுக்கு, இந்தப் புத்தாண்டு எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

சூரியனின் ஆதிக்க எண்ணில் இந்தப் புத்தாண்டு பிறக்கிறது. சூரியன் உங்கள் இராசிக்கு 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு அதிபதி என்பதால், தொழிலில் லாபத்தைக் குவிக்கும் ஆண்டாகவே இந்த ஆண்டைக் கருதலாம்.

**புத்தாண்டின் தொடக்கம்**

புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் உங்களுக்கு, பொருளாதார நிலை உயர்ந்து புதிய பாதை அமைய இந்தப் புத்தாண்டு வழிவகுத்துக் கொடுக்கப் போகிறது. சந்தோச வாய்ப்புகளை அதிகமாக சந்திக்கப் போகிறீர்கள். சிந்தித்து செய்த காரியங்களில் எல்லாம் சிறப்பான பலன் கிடைக்கும். பண வரவும், பாராட்டுக்களும் வந்து சேரும் ஆண்டு இது.

ஆண்டின் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய், சுகஸ்தானத்தில் சனி வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார். குரு,சந்திர யோகத்தோடு ஆண்டு தொடங்குகிறது. தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறா[illegible] தனா[illegible]பதி குரு, லாப ஸ்தானத்தி[illegible]ரம் செய்கிறார். ஜாதகம் உங்க[illegible]குச் சாதமாக செயற்படும் அமைப்பிலேயே இந்த ஆண்டு தொடங்குகிறது. எனவே முன்னேற்றத்தின் முதற்படிக்குச் செல்லப் போகிறீர்கள். முக்கிய புள்ளிகள் உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

ஆண்டின் தொடக்கத்தில் தொழில் ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் கேது, செவ்வாய்-சுக்ரனுடன் இணைந்திருக்கிறார். ஜென்மத்தில் சனி, புதனோடு கூடியிருக்கிறார். சூரியபலம் 2இல் இருப்பது யோகம்தான். தன ஸ்தானம் வலுவடைந்துள்ளதால் வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

சொத்துக்களாலும், சொந்தங்களாலும் ஆதாயம் கிடைக்கும். வெற்றிக்கு வித்திட உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களே முன்வருவர். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரியப் போகிறீர்கள். குருப் பெயர்ச்சி, ராகு,கேது பெயர்ச்சி மற்றும் சனிப்பெயர்ச்சி போன்ற நிகழ்வுகள் வரும் ஆண்டில் நடைபெறப்போகிறது. கிரகங்களின் பெயர்ச்சியே நம்முடைய வளர்ச்சிக்குக் காரணம் என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள் நீங்கள். எனவே நவக்கிரகங்களால் நன்மைகளை பெற, அவைகள் வீற்றிருந்து அருள் வழங்கும் சிறப்பு ஸ்தலங்களுக்கு, முன்னதாகவே சென்று வழிபட்டு வருவது நல்லது.




அதுமட்டுமல்லாமல் உங்கள் இல்லத்து பூஜை அறையில் உங்களுக்கு யோகம் தரும் தெய்வங்களையும், சிவ குடும்பப் படத்தையும் வைத்து வழிபடுங்கள்.

**நலம் கொடுக்கும் ராகு,கேது பெயர்ச்சி**

27.07.2017 அன்று நடைபெறவுள்ள ராகு,கேது பெயர்ச்சி, உங்கள் வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல வழிவகுத்துக் கொடுக்கப் போகிறது. 9ஆம் இடத்திற்கு ராகு செல்கிறார். எனவே ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கப் போகிறது. அரசு வழி சலுகைகளும், அயலாரின் ஒத்துழைப்பும், உறவினர்களை ஆச்சரியப்பட வைக்கும். தேகநலம் சீராக இருக்கும். தெளிந்த சிந்தனையோடு செயற்படுவீர்கள். பூர்வீகச் சொத்துகளால் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பொன், பொருள் ஆடை, ஆபரண சேர்க்கையும் உண்டு.

வெற்றிகள் ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போகிறார். எனவே வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்க வழிபிறக்கும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறை, ஆன்மீகம் மற்றும் ஜோதிடத்துறை சார்ந்த பணியில் இருப்பவர்களுக்கு, விருதுகள் கிடைக்கும் அமைப்பும் உண்டு. பஞ்சம ஸ்தானத்தை கேது பார்ப்பதால் நினைத்த காரியம் நினைத்தபடி நடைபெற, நாக சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வது நல்லது. உத்தியோகத்தை பொறுத்தவரை நினைத்த படியே இடமாறுதல்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு மிகச்சிறந்த முன்னேற்றம் காணப் போகிறீர்கள். பதவி உயர்வு பரிசீலிக்கப்படும். சக பணியாளர்களும் உங்களுக்கு துணையாக நடந்து கொள்வர். ஒருசிலருக்கு வெளிநாடு செல்லும் யோகமும் கிடைக்கலாம்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி**

2.9.2017இல் குருபகவான் உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 12ஆம் இடம் பயண ஸ்தானம் என்பதால், பயணங்கள் அதிகரிக்கும். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். இது அயனசயன ஸ்தானமாகவும் கருதப்படுவதால், திருமண முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். மாலை சூடும் நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். குருவின் பரிபூரண பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிகிறது. அதன்பார்வை படும் இடங்களெல்லாம் புனிதமடையும் என்பதால், அந்த மூன்று இடங்களுக்குரிய ஆதிபத்யங்களும் முறையாகவும், சிறப்பாகவும் நடைபெறும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இல்லம் கட்டிக் குடியேறுவது அல்லது இல்லம் வாங்கிக் குடியேறுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். தாய்வழி ஆதரவு வந்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்கக்கூடும்.

சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவலைக் கேட்டு மகிழப் போகிறீர்கள். வம்பு செய்தவர்கள் வலிய வந்து சரணடைவர். குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்ல, உடன் இருப்பவர்களும் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். வீட்டுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்ட நேரிடும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிக பொறுப்புகள் சேரும்.

**சனிப் பெயர்ச்சி காலம்**

உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வரும் சனி பகவான், 16.12.2017 முதல் 2ஆம் இடத்திற்குச் செல்கிறார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனி விலகி குடும்பச் சனியாக மலர்கிறது. சகாய ஸ்தானத்திற்கும், சுக ஸ்தானத்திற்கும் அதிபதியான சனி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தனவரவு தாராளமாக வந்து கொண்டே இருக்கும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மங்கள காரியங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறும்.

மணமாலை சூடும் வாய்ப்பும், மழலைச் செல்வங்கள் பிறக்கும் சூழ்நிலையும் உருவாகும் நேரம் இது. அரைகுறையாக நின்ற பணிகள் அனைத்தும் நடைபெறும். பெற்றோர்களின் மணி விழாக்கள், முத்து விழாக்கள் நடைபெறும். சுப நிகழ்வுகள் அனைத்தையும் முன்னின்று நடத்துவீர்கள். சனி விலகும் நேரத்தில் மணியான வாழ்வு மலர, சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவதோடு, சனிக்குரிய சிறப்பு ஸ்தலாங்களுக்கும் சென்று வழிபடலாம்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 18.4.2017 வரை) புதிய திருப்பம் ஏற்படும். நண்பர்களின் ஒத்துழைப்போடு வெற்றி காண்பீர்கள்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை) ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. உடல்நலம் சீராகும்.

குரு வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டால் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

சனி வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 6.8.2017 வரை) உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். உடல்நிலையில் கவனம் தேவை. உத்தியோகம் மற்றும் தொழிலில் ஒரு சில மாற்றங்களைச் செய்ய நேரிடும். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வாருங்கள். பௌர்ணமி தோறும் மலைவலம் வந்து சிவனையும் உமையவளையும் முருகப் பெருமானையும் வழிபட்டு. எல்லா நாட்களையும் இனிய நாட்களாக அமைத்துக் கொள்ளுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

**விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு**

**வருடத் தொடக்கத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழும் வாய்ப்புக் கிடைக்கும். ஜென்மச் சனி விலகும் ஆண்டாக 2017ஆம் ஆண்டு இருப்பதால் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பெற்றோர் வழியிலும் உங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். பிள்ளைகள் வழியிலும் உங்களுக்குப் பெருமை சேரும். கணவன், மனைவிக்குள் பாசமும் நேசமும் கூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க குடும்பத்தினர் ஒத்துழைப்பர். ஆதாயம் தரும் காரியங்கள் அதிகமாக நடக்கும் ஆண்டு இது. இல்லத்து பூஜையறையில் ஆதியந்தப் பிரபு படத்தையும் ராமர் பட்டாபிஷேக படத்தையும் வைத்து வழிபட்டு வருவதன் மூலம் சகல யோகங்களும் வந்து சேரும்.**

(தொடரும்...)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–101

# புது வருடமும் சவால்களும் எதிர்பார்ப்புக்களும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

புதிய வருடத்தில் எல்லோருக்கும் அனைத்துச் செல்வங்களும் பேறுகளும் கிடைத்து இன்புற்று வாழ எழுதும் இக்கைகள் மனதார வாழ்த்துகின்றன. புதிய வருடம் எதிர்பார்ப்புக்கள் பலவற்றையும் சவால்களையும் சுமந்து வருகின்றதுபோல தெரிகின்றது. எதிர்பார்ப்புக்களில் உற்பத்தி பெருகவும், விவசாயப் பெருமக்கள் இன்புற்றுவாழ வழிவகைகளும் கிடைக்க வேண்டும் என்பதுடன் இயற்கையை அனுசரித்து அமர்க்களமாக இருந்தது போல தற்போதைய வருடஆரம்பம் இல்லை என்பது புலனாகின்றது. எதிர்பார்ப்புக்கள் பலமாக பல மட்டங்களில் இருந்தமை தவறும் போது மக்கள் விரக்திக்குள் உள்வாங்கப்படுகின்றார்கள். இதனை நிவர்த்தி செய்ய வேண்டியது உரித்தானவர்களின் பொறுப்பாகும். எந்தக்காரணத்திற்காகவும் இதனை தவிர்க்க முடியாது. வழமையான வெடிகளுக்கு குறைவில்லை என்றாலும் ஆங்காங்கே வெடி விபத்துக்கள் நிகழ்ந்துள்ளமையும் அதனால் மீண்டும் பிரச்சினைகளுக் அவதானிக்கப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் இனிமழை பெய்யாது விட்டால் தண்ணீருக்கான தட்டுப்பாடு அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமே. மத்திய அரசும் மாகாணசபையும் இந்த பிரச்சினையை மக்கள் எதிர்வுகொள்ளும் விடயங்களில் கரிசனைகாட்டவேண்டியது மிகவும் அவசியமாகும். குடிதண்ணீருக்கே தட்டுப்பாடு என்னும் போதுபயிர்ச்செய்கை வாய்ப்பற்றே போய்விடும். மாறாக நீர் அதிகம் தேவைப்படாத மரக்கறிப்பயிர்கள், பழமரங்கள் என்பனவற்றை நடுகை செய்வதும் பொருத்தமானதாக

மாறாக வழமைக்குமாறாக மழைபெய்யுமானால் மேற்கூறிய இழப்புக்களிலிருந்து நாம் மீண்டெழ முடியும். கடந்த 30 வருட துயர் நிறைந்த வாழ்க்கைக்கு பின்பு தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிலையிலுள்ள மக்களின் நிலை மீண்டும் ஒரு நெருக்கடியான காலகட்டத்திற்குள் வந்து உழலவிருப்பதனை முற்கூட்டியே அனுமானித்து அதற்கான மாற்று பரிகாரங்களை இப்போதிருந்தே கண்டறிந்து அமுல்படுத்த வேண்டும். காலநிலை மாற்றத்தை துல்லியமாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். மாணவர்களூடாக இந்த செய்தியை மக்களுக்கு எடுத்துச் செல்லலாம். மேலும் ஊடகங்களும் தங்களது பணிகளில் இதற்காக முன்னுரி மையளிக்கலாம்.

தினமும் காலநிலை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 117




நம்மவர்கள் விவசாயத்தை செய்யும் போது அதனூடான பலன்களும் அதிகம் கிடைக்க வேண்டும் என்பதும் இங்கே முக்கியமாகின்றது. அதேநேரத்தில் பல சோதனைகளும் எம்மை நெருட வருகின்றது போலவும் தெரிகின்றது. காலநிலை மாற்றத்தின் விளைவின் ஒரு பகுதியாக மழை பொய்த்து குறைந்தளவு மழை நீரே கிடைத்திருக்கின்றது. அதனால் பயிர்களில் இப்போதிருந்தே வாடல் ஆரம்பித்திருக்கின்றது. பிந்திக்கிடைத்த மழையும் வழக்கமான அளவுக்கு பெய்யாமல் மிகவும் குறைவாக பெய்திருப்பதனால் குளங்குட்டைகள் விரைவில் காய்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. அண்டை நாடான இந்தியாவில் தமிழ்நாட்டிலும் இந்த வரட்சி இப்போதிருந்தே உணரப்பட்டிருக்கின்றது. நிலம் காய்ந்து நீர்நிலைகள் வற்றும் போது கிடைக்க வேண்டிய நீர் கிடைக்காது போகின்ற துர்ப்பாக்கிய நிலை. இதனால் பயிர்களை காப்பாற்ற முடியாமல் உற்பத்தி குறைவடைவதுடன் உற்பத்தியாளர்களும் மன உளைச்சலுக்குட்படும் நிலை ஏற்படவாய்ப்புக்கள் அதிகமே. இதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் நாம் பலமாக ஆராய வேண்டும்.

கடந்த வருடஆரம்பம் கிடையில் எம்முறவுகள் தங்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றை முகாமைத்துவப்படுத்திய விடயத்தை ஆழ்ந்து உற்றுநோக்கினால் இனி எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சினைகளை இலகுவாக சமாளிக்கக் கூடியதன்மை இவர்களுக்கு உண்டு எனலாம்.

கடந்த வருடம் இந்தளவிற்குநிலம் காயவில்லை. மழையும் பரவலாக அவ்வப் போது பெய்ததனாலும் வளிமண்டல உஷ்ணம் அதிகமாக இல்லா திருந்ததாலும் பயிர்ச்செய்கைக்கு எந்த விதமான பிரச்சினைய்யும் ஏற்படுத்தப்படவில்லை. இம்முறை மழை வீழ்ச்சி குறை வாகவும் மற்றைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் போதியளவு இல்லாமல் இருந்ததும் இருக்கும். மேலும் தமிழ்நாட்டினை தற்போது வரட்சியான மாநிலமாக பிரகடனப்படுத்தும் முயற்சிபோல வடபகுதியையும் பிரகடனப்படுத்துவதற்கான ஆயத்தங்களை செய்வதன் மூலம் விவசாயப் பெருமக்களையும் விவசாயத்தையும் காப்பாற்றலாம். பலத்த நெருடல்களுக்கு மத்தியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயப் பெருமக்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். வரட்சியின் உச்சக்கட்டமாக உற்பத்தி வீழ்ச்சி, தொழிற்றுறையில் பிரச்சினைகள்,பல் பயன்தருமரங்களின் இழப்பு என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. இவை சாதாரண விடயங்களென ஒதுக்கி விடமுடியாது.

அளந்தறியவும் அதனை மக்களுக்கு அறிவிக்கவும் அதியுயர் தொழில்நுட்பத்தின் தேவை உணரப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் மக்களையும் அவர்களது பயிர்ச் செய்கையையும் தப்ப வைக்கும் அதேநேரத்தில் மக்களை தயார்நிலையில் வைப்பதற்கும் இந்த தயார்ப்படுத்தல் உதவும். நீர் சேமிப்பு தொழில்நுட்பங் களின் அவசியமும் நீர் சேமிப்பு முறைகளின் தேவையும் இதற்காக அவசியம் தேவைப்படுகின்றது.


எங்களூர் உற்பத்தி,தொழில்விருத்தி என்பனவற்றிற்கு அவசியமாக தொழில்நுட்பத்தின் உள்வாங்குகை தேவை ப்படுகின்றது.

காலநிலை மாற்றத்தின் தாக்கம் பலமாக தற்போது உணரப்படும் நிலையில் அதற்கான கற்கை நெறிகளை அதிகரித்து அனைவருக்கும் கால நிலை மாற்றத்தின் விளைவுகள் பற்றி அறிவுறுத்தப்படவேண்டும்.

இது இன்றோடு உள்ள மாற்றமல்ல. தொடர்ச்சியாக செய்யப்படவேண்டியதும் நுணுக்கமாக செய்யப்பட வேண்டியதுமாகும்.

பாடசாலைகளில் இந்த மாற்றங்கள்,விளைவுகள் பற்றிய அறிவுறுத்தல்களையும் மேலும் கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளினூடாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாற்றம் பற்றிய செய்திகளை வழங்கி மக்களை ஏற்படப்போகும் இழப்புக்களை சீர்செய்யும் நிலைக்குமாற்றியமைக்க வேண்டும். நிறுவனங்களிலுள்ள ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நீரின் தன்மை மற்றும் சிக்கன பயன்பாடு பற்றியும் விளங்கப்படுத்த வேண்டும். எதிர்வரப்போகும் பிரச்சினையை நாம் அனைவரும் இணைந்து எதிர்கொண்டால் ஓரளவுக்கேனும் எதிர்வரும் வரட்சியை தாக்குப்பிடிக்கலாம்.

இது எமக்காக நாம் வரையறுத்துள்ள கட்டளையாகும். ஒவ்வொரு வரும் பொறுப்புணர்வுடன் சேர்ந்துழைத்தால் இந்நாடு உய்யும். இனிவரும் சந்ததியும் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோ க்க முன்னாயத்தங்களை செய்துவிட வழிபிறந்திரு க்கின்றது. வருடஆரம்பம் மகிழ்ச்சியானதாக இல்லாவிட்டாலும் மகிழ்ச்சியாகவே கழிக்க வாழப் பழகிக்கொள்ளுங்கள். மற்றையவருக்கு மரியாதை செய்து நீங்களும் முன்னேறுங்கள்!. உங்கள் உயர்விலேயே பலர் தங்கியி ருக்கின்றார்கள் என்ற உண் மையையும் இதில் சொல்ல வேண்டியிருக்கின்றது.




# வொஸ்வோகன் கார் உற்பத்தி நிறுவனம் குளியாப்பிட்டியில் முதலீடு செய்யவில்லை

## பிரதமர் ரணில் மறுப்பு

உலகின் முன்னிலை கார் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான வொக்ஸ்வோகன் நிறுவனம் குளியாபிட்டியில் முதலீடு செய்யவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



அண்மையில் குளியாபிட்டியில் அடிக்கல் நாட்டப்பட்ட உற்பத்திச்சாலையானது வொக்ஸ்வோகன் கார் உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடையதல்ல என குறிப்பிட்டுள்ள அவர் வொக்ஸ்வோகன் நிறுவனத்தின் சில பிரச்சினைகள் காரணமாக அரசாங்கம் முதலீடு செய்ய அனுமதிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், குளியாபிட்டியில் அமைக்கப்படும் பாரிய உற்பத்திசாலையில் வொக்ஸ்வோகன் ரக கார்களும் பொருத்தப்படும் என அவர் தெரிவித்தார். குறித்த தொலைக்காட்சி ஊடகமொன்று இது பற்றிய பிழையான செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும், தம்மீதான காழ்ப்புணர்ச்சியினால் இவ்வாறு செய்தி வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# அரசிலிருந்து விலகிய பியங்கரவின் மெய்ப்பாதுகாப்பாளர்கள் குறைப்பு!

அரசிலிருந்து விலகிய இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்னவின் பாதுகாப்புக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த 5 பொலிஸ் உத்தியோகஸ்தர்களில் நால்வர் விலக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சராக இருந்த அவருக்கு வழங்கப்பட்டிருந்த 5 மெய்பாதுகாப்பாளர்களில் பிரதம பொலிஸ் பரீட்சகர், உப பொலிஸ் பரீட்சகர் மற்றும் இரு கான்ஸ்டபிள்கள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையக உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பியங்கர ஜயரத்ன, இராஜாங்க அமைச்சரான எனக்கு 6 மெய்பாதுகாப்பாளர்கள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் 5 பேர் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

அவர்களிலும் தற்போது 4 பேர் விலக்கப்பட்டு ஒருவர் மாத்திரமே இருக்கின்றார். பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருந்தாலும் எனக்கு மக்களின் பாதுகாப்பும், ஆசீர்வாதமும் தொடர்ந்தும் இருக்கும். நான் பதவியை இராஜினாமா செய்த நாள் தொடக்கம் மக்களின் ஆதரவை முன்னை விட அதிகமாகப் பெற்றிருகின்றேன் என இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன தெரிவித்தார். (இ-3)

# பொலிஸ் ஆணைக்குவின் தலைவர் திடீர் ராஜினாமா

பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சிறி ஹெட்டிகே தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அரசியலமைபபு சபைக்கு சமர்பித்துள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் பேச்சாளர ஒருவர் தெரிவித்தார். ஜேர்மனியிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராக செயற்படவுள்ளதால் இவ்வாறு அவர் இராஜினாமா செய்துள்ளார். அந்தப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக தொடர்ந்தும் செயற்படப் போவதாக தெரிவித்துள்ளார். (இ-3)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான 17 பேரும் வைத்தியசாலையில்

லிந்துலை - பெலார்வெல் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது நேற்றுக்காலை குளவி கொட்டியதில் 17 பேரு காயமடைந்த நிலையில் லிந்துல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஏழு பேர் சிகிச்சையின் பின் வீடு திரும்பிய போதிலும் எஞ்சிய 10 பேரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக லிந்துலை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி சீ.ஜீ.வீரமந்திரி காலமானார்


இலங்கை முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியும், சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியுமான சீ.ஜீ. வீரமந்திரி காலமானார்.

இலங்கை அபிமானிய கிறிஸ்தோபர் கிறேகரி வீரமந்திரி நேற்று முன்தினம் காலமானார். இவர் தனது 90ஆவது வயதில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 950

Nagendram Home

நிரு




வேணு

குடும்பஸ்தன்_பாடசாலை@..ரிலாக்ஸ் ப்ளீஸ்.

ஒரே நேரத்துல.
ஒன்பது ரியாக்சன் கொடுப்பது
பெண்களின் குணம்..
ஒன்பதில், ஒன்னுமே புரியாமல்
தவிப்பது..
ஆண்களின் மனம்..

- ந. முத்துக்குமார்

ரதி




மாதுரி




பிரவீன்




கண்ணா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்த முடியாது என்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருப்பதை கண்டிப்பதாக தமிழகத்தின் பாட்டாளிகள் மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்பட்டது குறித்த விசாரணையில் என்ன நடக்கக்கூடாது என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் எதிர்பார்த்தார்களோ அது தான் நடந்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டில் முடிவடைந்த போரில் அனைத்துப் போர்க்குற்றங்களையும் கட்டவிழ்த்துவிட்ட மகிந்த ராஜபக்ஷ அரசு, ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமாக தமிழர்களை கொடூரமாக கொன்றழித்தது.

தமிழர்கள் படுகொலைக்கு நீதி விசாரணை கோரி உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி வந்த நிலையில், அதுகுறித்து ஐ.நா. மனித உரிமை பேரவை விசாரணை நடத்துவதற்கான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

அவ்விசாரணைக்கு இலங்கை தரப்பில் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்பட்ட நிலையில், அவற்றைக் கடந்து விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அந்த விசாரணையில் தெரியவந்த குற்றச்சாட்டுகளை விசா ரித்து தீர்ப்பளிக்க பன்னாட்டு நீதி மறை விசாரணைக்கு ஆணையிட வேண்டுமென தமிழ் கட்சிகளும் தமிழர் அமைப்புகளும் வலியுறு த்தியிருந்தன.

எனினும் அதற்கு மாறாக சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் அடங்கிய இலங்கை நீதிமன்றமே இது பற்றி விசாரிக்கும் என இலங்கை உள்ளிட்ட நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பரில் நிறைவேறியது. அதனடிப்படையில் கலப்பு நீதி விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில வாரங்களிலேயே அதை ஏற்க முடியாது என்றும் முழுக்க முழுக்க இலங்கை நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளைக் கொண்ட நீதிமன்றம் தான் விசாரணை நடத்தும் என்றும் அரசு கூறியுள்ளது.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றமே போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென நல்லிணக்க செயலணி பரிந்துரைத்திருந்தது.

எனினும் இந்த பரிந்துரையை ஏற்க இலங்கை அரசு மறுத்து விட்டது. அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்பதும் ஏற்காததும் அரசின் விருப்பம். சர்வதேச நீதிபதிகள் கொண்ட நீதிமன்றம் தான் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற பரிந்துரையை இலங்கை நிராகரிப்பது இது இரண்டாவது முறையாகும்.

இலங்கை அரசின் மீதான போர்க்குற்றங்கள் பற்றி இனி உள்நாட்டு நீதிமன்றமே விசாரணை நடத்தும். இந்த விசாரணையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்காது. அதுமட்டுமன்றி, தமிழர்களை திட்டமிட்டு படுகொலை செய்த போர்க்குற்றவாளிகள் அனைவரும் தப்பி விடுவார்கள்.

இதைத்தடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் பொறுப்பும் இந்திய அரசுக்கு உள்ளது. போர்க் குற்றங்கள் மீதான நீதி விசாரணை குறித்த இறுதி அறிக்கையை தாக்கல் செய்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் பெப்ரவரி 27 முதல் மார்ச் 24 வரை நடைபெறவுள்ளது.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்துவதாக மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் கொண்டு வந்த நாடுகளில் இலங்கை ஒன்று. ஆனால், தனது தீர்மானத்தை தானே மதிக்காத இலங்கையில் சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்தும்படி மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதில் பயனில்லை.

இலங்கை மீதான போர்க குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது அதற்கு இணையான அதிகாரங்கொண்ட நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும்" என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-3)

# நாடாளுமன்றின் அனுமதியின்றி 'எட்கா' கைச்சாத்திடப்படாதாம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றின் அனுமதியின்றி எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எட்கா தொடர்பில் நாடாளுமன்றில் ஏகமனதான அனுமதியுடனும் நாட்டு மக்களிடம் கலந்துரையாடிய தன பினனரே உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

நாம் அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு எதனையும் மூடி மறைத்து விட்டு உடன்படிக்கைகளில் கைச் சாத்திடப் போவதில்லை.

எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதனால் எமது நாடே அதிகளவில் நன்மை அடைகின்றது.



உத்தேச உடன்படிக்கையின் மூலம் இந்திய சந்தைகளில் பிரவேசிக்க எமக்கு சந்தர்ப்பம் கிட்டும். சரியான விபரங்களை புரிந்து கொள்ளாது சில தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இந்தியர்கள் இலங்கையில் தொழில்களில் ஈடுபடப் போவதில்லை. நாமே இந்தியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ளவுள்ளோம்.

இந்த உடன்படிக்கையின் ஊடாக இந்தியாவிற்கு கூடுதல் நன்மை கிடைக்கும் என்றால் அதற்காக முதலில் எதிர்ப்புக் குரலை வெளியிடுவது நானாகத்தான் இருக்கும்.

புத்த பெருமான் முதல் விஜயன் வரையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தார்கள்.

இந்திய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நோயாளர் காவு வண்டி தொடர்பிலும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது அனைத்தும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கில் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்ற போதிலும் எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் அதன் ஊடாக இலங்கைக்கு கூடுதல் நன்மை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 12 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பட்டதாரி/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6730 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6789 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6731 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 45<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6790 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 17சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/கணக்காளர்<br>தொ.இ: B/6732 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 148cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6792 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: சூரிசெவ் 3 இல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6733 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:AAT/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6793 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


# உதய நாளும் பரிசுத் தினமும்

அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாளும் பரிசுத் தினமும் எதிர் வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை வாழ்வகம் செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கமும் சிறப்பு விருந்தினராக யூனியன் கல்லூரி அதிபர் தி. வரதன், வடக்கு- கிழக்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பொது முகாமையாளர் அ.கிருபாகரன், கிழக்கு பல்கலைக்கழக ஓய்வு நிலை விரிவுரையாளர் ஏ.நே.உவோட்ஸ் வேத், சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர் தி. சுதர்சன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மு.செல்வகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# புதிய அரசியல் அமைப்புக்கு இது பொருத்தமான தருணமல்ல

## ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

**புதிய அரசியல் அமைப்பு கொண்டு வருவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

புதிய அரசியல் அமைப்பு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு உசிதமான தருணம் இதுவல்ல. ஜனாதிபதியின் பதவி பெயரளவு பதவியாக மாற்றப்படுவதனை ஜாதிக ஹெல உறுமய விரும்பவில்லை.

இப்போது புதிய அரசியல் அமைப்பு குறித்த யோசனை முன்வைக்கப்பட்டால் அபிவிருத்தி விசேட நியமச் சட்டத்திற்கு நேர்ந்த கதியே நேரும். மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்க முயற்சிக்கப்படுகின்றன.

எனினும் அவ்வாறு வழங்குவ்து நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும். அதிகாரம் ஒரு இடத்தில் குவிக்கப்பட வேண்டும் அவ்வாறு செய்தால்தான் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து மீள முடியும்.

மாகாணசபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படும் யோசனைக்கு நாம் உடன்படவில்லை. மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதனையும் விரும்பவில்லை எனத் தெரிவித்தார். (இ-3)

---

**வித்தியா கொலை; சந்தேக நபர் கட்டுநாயக்கவில் கைது**

## மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் ஆபத்து

### முன்னாள் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது என முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி குணவர்தன அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உத்தேச அரசியல் அமைப்புச் சட்டத்தின் பரிந்துரைகளுக்கு அமைய தேசிய பொலிஸ் மற்றும் மாகாண பொலிஸ் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டால், பொலிஸ் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

35 ஆண்டுகளாக பொலிஸ் சேவையில் ஈடுபட்ட அனுபவத்தின் ஊடாக இதனைக் கூறுவதாகத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவி வித்தியா கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்ய முடிந்தமைக்கு பிரதான காரணம் பிளவடையாத பொலிஸ் சேவையேயாகும் என அவர் தெரிவித்தார்.

உத்தேச அரசியல் அமைப்பு பரிந்துரைகளுக்கு அமைய இலங்கை பொலிஸ் திணைக்களம் ஒன்பது துண்டுகளாக பிளவடையும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிய நடைமுறை அமுல்படுத்தப்பட்டால் பொலிஸ்மா அதிபரினால் மாகாண பொலிஸ் விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாத நிலைமை ஏற்படும் என சிங்கள பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-3)

---

## இலங்.கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட 86ஆவது நீர்சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட 86ஆவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திறப்பனே மகானாம மகா வித்தியாலயத்தில் நிறுவப்பட்ட 86ஆவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் இப்பாடசாலையிலுள்ள 1,200 மாணவர்கள் மற்றும் 75 ஆசிரியர்கள் உட்பட இப்பிரதேசத்தைச் சேர்ந்த 750 குடும்பங்கள் பாதுகாப்பான தூய குடிநீரை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் பயர்பிளை மிஷன் சிங்கப்பூர் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடற்படையின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான மையத்தினால் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, சிறுநீரக நோய் பரவலாக காணப்பட்ட பிரதேசங்களில் ஒரு வருட காலப்பகுதியினுள் 86 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்ததன் மூலம் சுமார் 40,600 குடும்பங்களும் மற்றும் 34,200 பாடசாலை மாணவர்களும் சுத்தமான குடிநீரை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடற்படைத்தளபதிவைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பணிப்புரையின் பேரில் இலங்கை கடற்படையினரின் நிதிஉதவியுடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த இத்திட்டமானது டிசெம்பர் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

---

## உள்ளூராட்சி மன்றதேர்தலை ஒத்திவைக்க இடமளிக்க முடியாது-வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை தொடர்ந்தும் ஒத்திவைக்க இடமளிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பல்வேறு தந்திரங்களைச் செய்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசாங்கத்திற்கு தேவை ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு இடமளிக்கப்பட முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்கும் அவசியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கே உண்டு.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறிய அரசியல் கட்சிகள் புதிய தேர்தல் முறைக்கு எதிர்ப்பு வெளியிடக்கூடும் என்பதனால், அதனை காரணம் காட்டி பிரதமர் தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றார்.

தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டால் பாரியளவில் மக்கள் கிளர்ச்சி ஏற்படும்.

வாக்கு உரிமைக்காக மேற்கொள்ளும் போராட்டங்களை அடக்கி விட முடியாது.

இவ்வாறு தேர்தலை ஒத்தி வைத்தால். அரசாங்கத்திற்கு



உதவி வரும் உள்நாட்டு வெளிநாட்டு சிவில் அமைப்புக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை ஏற்படும்.

மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டால் அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை வரையில் செல்லக்கூடும் என வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-3)

---

## பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள சபாநாயகர் மறுப்பு

அரசாங்கத்தின் மீது பிர யோகிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்ப்பை சரிப்படுத்துவதற்காக பிரதமர் பதவியை மாற்றி மற்று மொரு தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆயத் தமாகுவதாக அண்மையில் தகவல் வெளியாகியிருந்தது.

அதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியை சபாநாயகர் கருஜெயசூரியவுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட் டிருந்த போதிலும். சபாநாயகர் கருஜெயசூரிய அதற்கு இணக்கம் வெளியிடவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யில் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு களை சரிப்படுத்திக் கொள்வதற்கு தகுதியான நபரான கருஜெய சூரியவை பிரதமர் பதவியில் நிய மிப்பதற்கு ஜனாதிபதியின் ஆலோ சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கருஜெயசூரியவுக்கு சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவினை பெற்றுக் கொள்ள முடியும் என்பதனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ஆயத்தமாகியுள்ளார். (இ-3)

---

## காட்டுத் தீயால் ஒன்றரை ஏக்கர் காட்டுப்பகுதி எரிந்து நாசமானது



(கொழும்பு)

தலவாக்கலை தோட்டத் தின் நானுஓயா பிரிவிலுள்ள காட்டில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட காட்டுத்தீயினால் பெரும் நிலப்பரப்பு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகி ன்றது.

தலவாக்கலை தோட்டத் தின் நானுஓயா பிரிவிலுள்ள காட்டில் நேற்று மாலை ஏற்பட்ட தீயிலேயே சுமார் ஒன்றரை ஏக்கர் பிரதேசம் முற்றாக எரிந்து தீக்கிரையானதாக தெரிவிக்கப்படுகிறது. தலவாக்கலை விசேட அதிரடிப்படையினரின் முயற்சியினால் காட்டுத்தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் தீ பரவலுக்கான காரணத்தை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# வடக்கு சபைக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

## எச்சரிக்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

**வடமாகாணசபை இனவாதச் செயற்பாடுகளை நிறுத்தாவிடின் அதற்கு எதிராக வழக்குத் தொடர நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணைத் தவிசாளர் ஹெடிகல்லே விமலசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பத்தரமுல்லவில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"வட மாகாணசபை இனவாத மற்றும் பிரிவினைவாத பொருளாதார கொள்கைகளை பின்பற்றி வருகின்றது. இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், மாகாண சபைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர நேரிடும். வட மாகாணசபையின் இனவாத செயற்பாடுகளை தடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் போர் வெற்றியின் பலன்களை நாட்டுக்கு வழங்க முடியாது போகும்.

வட மாகாணசபை எல்லைக்குள் பௌத்த விஹாரைகள் அமைப்பது தொடர்பில் மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன. தெற்கின் கள் வகைகள் வடக்கில் தடை செய்யப்படும் வகையிலான தீர்மானம் பொருளாதார பிரிவினைவாதமாகும். இவ்வாறு நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் பண்டங்கள் சேவைகள் பரிமாற்றம் செய்வதில் நெருக்கடி நிலைமை ஏற்படும். வட மாகாணசபை தொடர்ந்தும் இனவாத, கடும்போக்குவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதனை மீளவும் உறுதி செய்து வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-3)

# அம்பாந்தோட்டை உடன்படிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்



அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் வலயம் தொடர்பாக சீனாவுடன் செய்து கொள்ளவுள்ள உடன்பாடுகளின் பிரதிகள், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹொரணவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், 'நாடாளுமன்றத்தில் விரைவில் ஒரு அறிக்கையை வெளியிட்ட பின்னர், அம்பாந்தோட்டை தொடர்பான எல்லா உடன்பாடுகளின் பிரதிகளையும் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சமர்ப்பிப்பார்.

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்துக்கு தனியார் காணிகள் சுவீகரிக்கப்படாது. அரச காணிகள் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்படும். வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காகவே அரச காணிகளை தொழில்களைத் தொடங்குவதற்காக வழங்குகிறோம்.

இந்தியாவிலும் தாய்லாந்திலும் உள்ளது போல, கைத்தொழில் வலயங்களுக்கான காணிகளை இனம் காண்பதற்கும் அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கும் அதிகாரசபை ஒன்று உருவாக்கப்படும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# 1 நிமிடத்திற்கு 2இலட்சம் ரூபா செலவு கோத்தபாயவின் மறுபக்கம் அம்பலம்

(கொழும்பு)

பிரபல பாடகர்கள் இருவரினால் நடத்திச் செல்லப்படுகின்ற தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 2 கோடியே 76 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் வழிகாட்டலின் கீழ் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை காணி மீட்டல் மற்றும் மேம்பாட்டுச் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பெல்லன்வில நடைபயிற்சி பாதை மற்றும் உணவு பகுதி திறக்கும் நிகழ்விற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி மாலை 5.30 மணியில் இருந்து மாலை 7.30 மணி வரையிலான இரண்டு மணித்தியாலத்திற்கு இடம்பெற்ற நிகழ்வை ஏற்பாடு செய்வதற்காக, பாரிய அளவு பணம் பாத்திய ஜயகொடி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

செலவிடப்பட்டுள்ள பணத்திற்கமையவும் அந்த நிகழ்வு இடம்பெற்ற காலத்திற்கமையவும் நிமிடத்திற்கு கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத் தலைவர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு இவ்வளவு பெரிய அளவிலான பணம், கொள்முதல் நடவடிக்கையினை பின்பற்றாமல் அதற்காக பணிப்பாளர் சபையில் அனுமதி பெறாமலும் செலவிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் வெளியாகியுள்ளது.

'வெரெஸ்கஹா திட்டம்' என்ற பெயரில் அபிவிருத்தி திட்டத்தின் பெல்லன்வில பகுதியை திறக்கும் நிகழ்வு அன்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வின் விருந்தினர் நடனத்திற்காக ஒரு கோடி 38 இலட்சத்து 45 ஆயிரம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த நிகழ்வின் இன்னுமொரு அங்கத்திற்காக ஒரு கோடியே 11இலட்சம் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அதே நிகழ்வின் பிறிதொரு செயற்பாட்டுக்காக 18 இலட்சத்து 31 ஆயிரம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு மேலதிக செலவிற்காக 8 இலட்சத்திற்கும் அதிக



பணம் செலவிடப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் ஒரு நிகழ்விற்காக முழுமையாக செலவிடப்பட்ட முழுமையான தொகை 2 கோடியே 76 இலட்சத்து 14 ஆயிரத்து 440 ரூபா பணம் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### கடனும் நல்லுறவும்

யாரிடமேனும் நன்கு சிரித்துப் பேசவே பயமாக இருக்கிறது. உடனே கை மாற்றுக் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். நன்கு பேசிக் கொண்டால் ஐம்பது கொடு! நூறு கொடு என்று வெட்கமில்லாமல் கேட்கிறார்கள்.

முதல் நாள் தெருவில் பார்த்துச் சிரித்ததுக்குத் தண்டனையாய் மறுநாளே படியேறி வந்து கடன் கேட்கிற மனிதர்களின் சுபாவம் கண்டு நான் பல முறை அதிர்ச்சி அடைந்திருக்கிறேன்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு எந்நேரமும் யாரை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் யாரிடம் எவ்வளவு கடன் கேட்டுப் பெறலாம் என்பது தான் முழு நேரச் சிந்தனை. கனவுகள் கூட இது தொடர்பாக இருந்தால் வியப்பு அடைவதற்கு இல்லை. மட்டமான மனிதர்கள்!

நட்புக்கும் உறவுக்கும் பாசத்திற்கும் அன்புக்கும் கேவலம் கற்பிக்கிறவர்கள் இவர்கள்.

உன் அன்பை விட , உன் பாசத்தைவிட , உன் நட்பை விட உன்னிடமுள்ள பணமே எனக்குப் பெரிது என்று சொல்லுவதற்கும் எனக்கு கடன் கொடு என்று கேட்பதற்கும் வித்தியாசமே இல்லை.

உறவு என்பதும் நட்பு என்பதும் தமக்கு உதவுவதற்காகவே என்று இவர்கள் ஏன் புரிந்து கொள்ள வேண்டும்? இது எந்த ஊர் நியதி ? அல்லது யார் வகுத்த நீதி?

கடன் தருகிறவர்கள் தாம் இவர்களுக்கு மனிதர்களாம். உதவி செய்பவர்கள் தாம் இவர்களுக்கு வேண்டியவர்களாம். என்ன ஒரு மோசமான வாழ்க்கைப் பார்வை!

நம்மைப் போல் மற்றவர்களுக்கும் ஆயிரமாயிரம் பிரச்சினைகள், கடன் தர இயலாமல் போகிற பொழுது அங்கு அன்பு இல்லை– நட்பு இல்லை என்று இவர்கள் அனர்த்தம் செய்து கொள்வது கொஞ்சமும் சரியில்லை.

நமக்கு ஒரு பிரச்சினை என்றால் அதைக் குறிப்பால் உணர்த்தலாம். இந்தப் பொங்கல் எனக்குப் புதுத் துணி இல்லாத பொங்கல் தான்! என்று இலேசாகத் தொட்டுக் காட்டினால் போதும். நண்பரோ, உறவினரோ நான் இருக்கிறபோது நீ இப்படிச் சொல்லலாமா என்று கேட்டுப் பணத்தை நீட்டுவார். நீட்டாவிட்டால் போகிறார். அவரைக் கட்டாயப்படுத்திக் கேட்பது முறையில்லை.

ஆத்மார்த்தமாகப் பழக வேண்டும்; எதையும் எதிர்பார்த்து அல்ல.

ரி.வி வாங்கணும்! 300 கொடு! என்று கேட்பதெல்லாம் கொழுப்பெடுத்த கடன். ஓர் எதிர்பாராத மருத்துவச் செலவு ; பணம் போதவில்லை என்றால் நாம் கேட்கவே வேண்டாம். பிறருக்குத் தெரிய வந்தாலே போதும்.தேடி வந்து பணம் விழும் இது மாய மந்திரம் அல்ல. அந்த அளவுக்கு நாம் நம்மைச் சுற்றியிருப்பவர்களுடன் பழகி வந்திருக்க வேண்டும்.

நன்கு பழகிவிட்டு கடன் கேட்கும் போது என்ன தான் நான் வித்தியாசமாக நினைக்கவே மாட்டேன் என்று உதடு சொன்னாலும், உள்ளுக்குள் ச்சீ! என்று அவர்களுக்கு ஆகிவிடும். நல்ல மனத்தைப் பிழிய வைத்துப் பெறுவது முறையில்லை. அப்படி ஒரு கடன் தொகை தேவையா?

ஆண்டவா நீ என்ன தர்ம சங்கடத்தைக் கொடுத்தாலும் பரவாயில்லை! ஆனால் என்னை மதித்துப் பழகி அன்பு காட்டுகிறவர்களிடம் கடன் தாருங்கள் என்று கையை நீட்டுகிற கேவலமான நிலைக்கு மட்டும் என்னை நீ தள்ளிவிடாதே! என்பது நம் நினைப்பாக மட்டுமல்ல. நம் அன்றாடப் பிரார்த்தனைகளுள் ஒன்றாகவும் ஆகிவிட வேண்டும்.

அப்போது தான் நாம் மதிப்புடனும் சுய கௌரவத்துடனும் பலரால் நேசிக்கப்படும் வகையிலும் வாழ முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




விதை விருட்சமாக நீரின் தீண்டல் தேவைப் படுகிறது. ஆகாயத்திலிருந்து விழும் நீர், மண்ணை ஊடுருவி, விதையை முத்தமிட்டால்தான் விதை உயிர்த்தெழும். இந்த பிரபஞ்சத்திலிருந்து மனிதன் தனித்தவன் இல்லை என்னும் போது, இந்த விதி அவனுக்கும் பொருந்தும்தானே...? இங்கே எல்லோருக்குள்ளும் திறமை கொட்டிக் கிடக்கிறது. அந்த திறமையைக் கண்டறிந்து அவனுக்கு வாய்ப்பளிக்க... அவனை கைதூக்கி விட, யாரோ ஒருவர் ஊக்கியாக இருக்க வேண்டி இருக்கிறது. ஜெயலலிதாவுக்கு அப்படியானவராக இருந்தவர் தான் ஸ்ரீதர். ஜெயலலிதாவை ஸ்ரீதர் தான் அறிமுகப்படுத்தினார் என்று சொல்லவில்லை... ஆனால், அவர்தான் ஜெவுக்கு 'ஜெ... ஜெ...' என பெரும் வெற்றியைப் பரிசாகத் தந்தார்.

'அன்று சிந்திய இரத்தம்' என எம்.ஜி.ஆரை கதாநாயகனாக வைத்து ஸ்ரீதர் ஒரு படம் தொடங்கி இருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களால் அந்தப் படம் முதல் ஷெட்யூலோடு நின்று விட்டது. அந்தப் படம் ஏன் நின்றது? என்ற எந்தக் காரணமும் எம்.ஜி.ஆரின் ரசிகர்களுக்குத் தெரியாது. அவர்கள் ஸ்ரீதரினால் தான் படம் நின்றது என்று நினைத்து விட்டனர். அவர மீது கடுமையான கோபத்தில் இருந்தனர். இத்தகைய சூழலில் தான், 'வெண்ணிறை ஆடை' படம் வெளியாகிறது. கடும் கோபத்தில் இருந்த ரசிகர்கள், அந்தப் படம் வெளியான தியேட்டர்களை எல்லாம் தாக்கத் தொடங்கினர்... பதாகைகளை எல்லாம் கிழிக்கத் தொடங்கினர். பின்னர் இந்த விடயத்தில் எம்.ஜி.ஆர். நேரடியாக தலையிட்டார். ரசிகர்களுக்கு 'அன்று சிந்திய இரத்தம்' திரைப்படம் குறித்த பிரச்சினையை விளக்கி, அமைதிப் படுத்தினார். ஜெவுக்கு உண்மையில் தமிழ் சினிமாவில் அதிரடியான அறிமுகம் தான்...!





**ஸ்ரீதர் - ஜெ கருத்து வேறுபாடு**

ஸ்ரீதர் தொடக்கத்தில் ஜெயலலிதா மீது அதிக பிரியம் கொண்டவராகத் தான் இருந்தார். அதற்குக் காரணம் ஜெயாவின் நடிப்புத் திறன். இதுகுறித்து ஸ்ரீதரே பின் ஒரு பேட்டியில் பகிர்ந்தார். அவர் வார்த்தைகளிலிருந்தே, "காதல், இன்பம், துன்பம், சிரிப்பு, அழுகை இப்படி பல வகையான பாவங்கள் உள்ள கரக்டராய் இருந்தாலும், ஒரே தடவை சொல்லிக் கொடுத்தால் போதும். நாம் நினைத்ததை விடவும் நன்றாக நடித்து விடுவார். நல்ல திறமையுள்ள, எல்லா வகையான பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் ஆற்றல் உடையவர் என்பதை பல படங்களில் அவர் நிரூபித்து வருகிறார்" என்று ஜெ பற்றி பகிர்ந்திருக்கிறார்.

ஆனால், எல்லாவற்றையும் சுழற்றி அடிக்கும் காலம்... இந்த அன்பையும்... பிரியத்தையும் சிதைத்துப் போட்டது. ஆம், இவர்கள் இருவரும் பின்னாளில், மிக மோசமாக பொது வெளியில் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

1996ஆம் ஆண்டு தான் அந்த சம்பவம் நடந்தது. ஸ்ரீதர் உடல்நலக்குறைவினால் அவதிப்பட்டு வந்தார். அவரை திரைக் கலைஞர்கள் எல்லோரும் சந்தித்து நலம் விசாரித்து வந்தனர். ஆனால், ஜெயலலிதா செல்லவில்லை. இந்த வருத்தங்களை பொது வெளியில் பகிர்ந்து விட்டார்...



"தெரிஞ்சவங்களுக்கு உடல்நிலை சரியில்லைன்னா, நேரில போய் விசாரிப்பது எல்லோருக்கும் தெரிஞ்ச நாகரிகம். இதை ஜெயலலிதாகிட்ட எதிர்பார்த்தேன்... ஏமாற்றி விட்டார்... கான்வென்ட் படிப்பு அவங்களுக்கு இவ்வளவு தான் சொல்லிக் கொடுத்திருக்கு போல.... அவங்க நடிச்ச அந்த கன்னட படத்தோடு அப்படியே விட்டிருந்தா... அவங்க தமிழக முதல்வர் ஆகி இருப்பாங்களா..?" என்று பகிர்ந்து விட்டார் ஸ்ரீதர்.

ஜெயலலிதாவுக்கு கோபம காட்டாற்று வெள்ளமாக வந்தது.... அந்தக் கோபத்தை வார்த்தைகளாக மாற்றி ஒரு கடிதம் எழுதினார். அதில், "ஸ்ரீதர் தான் என்னை தமிழ்த் திரை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். மறுக்கவில்லை மறைக்கவும் இல்லை... ஆனால், அதனால்தான் நான் பேரும் புகழும் பெற்றேன் என்று அவர் கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஸ்ரீதர் அறிமுகப்படுத்திய புதுமுக நடிகைகளில் எத்தனை பேர் முதலமைச்சராகி இருக்கிறார்கள்... எத்தனை பேர் அரசியலில் பிரவேசித்து இருக்கிறார்கள்...?" என்று காட்டமாகவே அந்தக் கடிதத்தை எழுதி இருந்தார். இப்படியாக இருவருக்குள்ளும் பெரும் விரிசல் வந்தது.

"இப்போது ஏன் இந்த வரலாறு." என்கிறீர்களா...? ஜெயலலிதாவை நீங்கள் முழுவதுமாக புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவீர்களாயின், ஜெ. ஏன் அரசியலில் தடாலடியாக முடிவுகளை எடுக்கிறார் என்று கேட்பீர்களாயின்... நீங்கள் இந்த நிகழ்வுகளை தெரிந்து கொள்ளத் தான் வேண்டும். ஆம், இதுதான் 'ஜெ...'. தன்னை தமிழில் அறிமுகப்படுத்தினார் என்பதற்காக ஸ்ரீதரிடம், அவர் கோபத்தை வெளிக்காட்டாமல் இருக்கவில்லை. தான் என்ன நினைத்தாரோ அதைப் பேசினார். அதன் விளைவுகள் குறித்து கவலை அவர் கொள்ளவில்லை... இந்தப் பழக்கம் தான் அவர் அரசியல் வாழ்க்கையிலும் தொடர்ந்தது.

இது சரியா? தவறா? என்று தர்க்கம் செய்ய இதைப் பகிரவில்லை... ஜெயலலிதா எப் போதுமே இப் படியாகத் தான் இருக்கிறார். பிம்பங்கள் எதுவும் இல்லாமல் அவரை அவர் சுயத்துடன் புரிந்துகொள்ளத்தான் இந்த நிகழ்வு.

ஹூம்... சொல்ல மறந்து விட்டேன்... ஜெயலலிதா "வெண்ணிற ஆடை" படத்துக்காக சம்பளமாக பெற்றது மூன்று ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்கள்.... ஆம், தமிழ் சினிமாவில் அவர் பயணம் இந்த மூன்றாயிரத்திலிருந்து தான் தொடங்கியது. இதிலிருந்து தொடங்கியவர்தான் பின்னர், எம்.ஜி.ஆர். தொடங்கிய சத்துணவுத் திட்டத்துக்கு சர்வ சாதாரணமாக நாற்பதாயிரம் ரூபாய் நன்கொடையாக கொடுக்கும் அளவுக்கு வளர்ந்தார். பின்னாளில், அவரே முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் வெறும் ஒரு ரூபாயை சம்பளமாக பெற்றார்.

**'சேவல் - புறா மோதல்'**


சென்ற அத்தியாயத்தில் எங்கு விட்டோம்... ம்ம் ம்ம்..... தமிழகத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்ட இடத்தில் தானே...? குடியரசுத்தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்த வேண்டும் என்பது சட்டவிதி. அதன்படி 1989இல், அ.தி.மு.க. இரண்டாக உடைந்து தேர்தலைச் சந்தித்தது. ஜானகி தலைமையில் ஒரு அணியும்... ஜெயலலிதா தலைமையில் ஒரு அணியும்... தேர்தல் சின்னமாக ஜானகி அணிக்கு இரட்டைப் புறாவும், ஜெ. அணிக்கு சேவலும் ஒதுக்கப்பட்டிருந்தன. ஜானகி அணியில் பெரும் தலைகள் எல்லாம் இருந்தனர். ஜெயலலிதா அணியில் அப்படி யாரும் இல்லை. ஜெயலலிதாவுக்கு இது வாழ்வா... சாவா யுத்தம்...? அவர் அணி வெற்றி பெற்றே ஆக வேண்டும். அப்போதுதான் தன் இருப்பு இங்கு நீடித்திருக்கும். இல்லை என்றால் மீண்டும் தொடங்கிய புள்ளியிலேயே நிற்க வேண்டும்... இதை நன்கு உணர்ந்த ஜெயலலிதா தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்தார்... சென்ற இடங்களில் எல்லாம் திரண்ட கூட்டம் அவருக்கு உற்சாகத்தைத் தந்தது. எம.ஜி.ஆர். ரசிகனும்... தொண்டனும் தன் பக்கம் தான் இருக்கிறான் என்பதை உணர்ந்தார். இது அவர் நம்பிக்கைக்கு உரமேற்றியது.



ஜானகி அணிக்கு இது அச்சத்தை விதைத்தது. அவர்கள் பிரசார மேடையில் மோசமான வார்த்தைகளால் ஜெயலலிதாவை விமர்சிக்கத் தொடங்கினர். ஜெயலலிதாவும் ஜானகியை விமர்சித்தார். அது எல்லைமீறிச் சென்றது... ஒரு கட்டத்தில் ஜெயலலிதா, "எம்.ஜி.ஆரை, ஜானகி தான் மோரில் விஷம் கலந்து கொடுத்துக் கொன்றார்" என்றார். இது பல அதிர்வுகளை கிளப்பியது. உடனடியாக அப்போது ஆளுநராக இருந்த பி.சி. அலெக்ஸாண்டர் தலையிட்டார்.... "நான் வைத்தியர்களிடம் விசாரித்தேன்... விஷத்தால் எம்.ஜி.ஆர். மரணிக்கவில்லை" என்று தெரிவித்து, ஜெ - ஜா அணியினரின் வார்த்தை யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சேவலுக்கும் - இரட்டைப் புறாவுக்கும் நடந்த யுத்தத்தில்.... சேவல் வென்றது...!

(தொடரும்)

# சீனாவில் காற்று மாசினால் நிறம்மாறும் புல்லட் ரயில்கள்



(பீஜிங் )

சீனாவில் நிலவி வரும் கடும் காற்று மாசுபாட்டால் அங்குள்ள புல்லட் ரயில்கள் நிறம் மாறி காட்சியளிக்கின்றன.

சீன்ாவில் காற்று மாசுபாடால் நிறம்மாறும் புல்லட் ரயில்கள் சீனாவின் பல பகுதிகளில் சமீப காலமாக காற்று மாசுபாடு கடுமையாக அதிகரித்தது. இதனால் அந்நாட்டு அரசால் இரண்டு முறை உயர் எச்சரிக்கை விடப்பட்டது. இதனையடுத்து பாடசாலை, கல்லூரி மற்றும் அலுவலகங்கள், தற்காலிகமாக மூடப்பட்டன.

தற்போது மீண்டும் காற்று மாசுபாடு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

பீஜிங் உள்ளிட்ட 72 நகரங்களில் பனிப்புகை சூழ்ந்துள்ளது. இது குறித்து அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது.

காற்று மாசுடன் கூடிய பனிப்புகை காரணமாக முக்கிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாயினர்.

இந்த காற்று மாசுபாடு அங்கு இயக்கப்படும் ரயில்களையும் விட்டு வைக்கவில்லை. முழுவதும் வெள்ளை நிறத்தில் இயக்கப்பட்டு வந்த புல்லட் ரயில்கள், காற்று மாசுபாட்டின் காரணமாக தற்போது பழுப்பு நிறத்தில் மாறியுள்ளன.

அந்தக் காட்சியை அங்குள்ளவர்கள் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து வருகின்றனர்.

சீனாவில், சுத்தமான காற்று விலைக்கு விற்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# எம்.ஜி.ஆருக்காக ஜெயா ஒன்றுமே செய்யவில்லை

## உதயமானது புதிய கட்சி

தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பில் இருந்தும் சசிகலாவிற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில், எம்.ஜி.ஆர். ரசிகர்கள் ஒன்றிணைந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்து சசிகலாவை எதிர்ப்பதற்கு தயாராகியுள்ளனர்.

எம்.ஜி.ஆர். போன்று உருவ ஒற்றுமை கொண்ட சக்கரவர்த்தி என்பவர் தான் அகில இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியை ஆரம்பித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், புரட்சித் தலைவரின் கொள்கைகளை மக்களிடம் கொண்டுசெல்ல இந்தப் புதிய கட்சியைத் தொடங்கியுள்ளோம். தற்போது அ.தி.மு.க. தொண்டர்கள் எங்கு செல்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கொண்டாரே தவிர, எம்.ஜி.ஆர். பெயரை எதற்கும் வைக்கவில்லை.

எங்கள் கட்சியில் 5,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கூட்டி, கோயம்புத்தூரில் மாநாடு ஒன்று நடத்தவுள்ளோம். நாங்கள் மக்களைச் சந்தித்துவிட்டுத்தான் அரசியலுக்கு வரப் போகிறோம். சசிகலாவும் மக்களைச் சந்தித்து விட்டு வரவேண்டும். குறுக்குவழியில் வரக் கூடாது.

சசிகலாவின் போஸ்டர்களைக் கிழிப்பதால் ஒன்றும் நடக்காது. நான் 30 வருடங்களாக அ.தி.மு.கவில் இருக்கிறேன். இதுவரை எந்தப் பதவியும் எனக்குக் கொடுக்கவில்லை. இதற்காகக் கொடநாடு வரைக்கும் போய்ச் சண்டை போட்டு இருக்கிறேன்.

தற்போது அகில இந்திய



யாரும் திணற வேண்டிய அவசியம் இல்லை. வாருங்கள், ஒன்றுபட்டு எம்.ஜி.ஆர். ஆட்சியை அமைப்போம். புரட்சித் தலைவருக்காக இதுவரை ஜெயலலிதா, ஒன்றுமே செய்யவில்லை.

அவருக்கு, மணிமண்டபம்கூடக் கட்டவில்லை, எல்லாத் திட்டங்களுக்கும் தனது பெயரை வைத்துக் புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்கிற கட்சியைத் தொடங்கியுள்ளோம்.

ஓர் அளவுக்குத்தான் பொறுமையாக இருக்க முடியும். சாது மிரண்டால் காடு கொள்ளாது. சசிகலாவே எங்களைக் கூப்பிட்டுச் சமரசம் பேசினாலும் நாங்கள் மனம் மாறமாட்டோம் என்று சக்கரவர்த்தி தெரிவித்தார். (இ-7)

# சசிகலாவுக்கு ஷாக் கொடுத்த முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்



தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலினுக்கு முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வாழ்த்து கூறியது அ.தி.மு.க. பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சசிகலா, முதல்வர் பதவியை கைப்பற்ற ஆவலுடன் காத்துக் கிடக்கிறார். இதனால் ஓ. பன்னீர்செல்வம், சசிகலா இடையேயான பனிப்போர் உச்சக்கட்டத்தில் இருக்கிறது.

இந்நிலையில் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் ஸ்டாலினை விமர்சித்து சசிகலாவின் பெயரில் கையெழுத்திடாத அறிக்கை ஒன்று நேற்று முன்தினம் வெளியானது.

அதேநேரத்தில் தலைமை செயலகத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை ஸ்டாலின் நேரில் சந்தித்தார்.

அப்போது புன்னகை பூத்த முகமாக ஸ்டாலி னுடன் பேசிக் கொண்டிருந்த பன்னீர் செல்வர், தி.மு.க. செயல் தலைவராக நியமிக் கப்பட்டதற்கு அவருக்கு வாழ்த்தும் தெரிவித்தார். இந்த தகவல் உடனே போயஸ் கார்டனுக்கு செல்ல, இதைக் கேட்ட மன்னார்குடி கோஷ்டி மிகவும் அப்செட் ஆகிபோயுள்ளனராம். (இ-7)

# வெள்ளை மாளிகையில் இந்தியருக்கு முக்கிய பதவி


(வோஷிங்டன்)

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராஜ் ஷா என்பவரை வெள்ளை மாளிகையில், தகவல் தொடர்பு துணை இயக்குநர் பதவியில் ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளார். இதந்த இடையே அவர் தனது புதிய நிர்வாகத்தில் பணியாற்றுவதற்கு பல்வேறு முக்கிய நியமனங்களை செய்து வருகிறார்.

அந்த வகையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராஜ்ஷா என்பவரை வெள்ளை மாளிகையில், தகவல் தொடர்பு துணை இயக்குநர் பதவியில் ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார்.

இவர், தகவல் தொடர்பு, அரசியல் ஆராய்ச்சியில் நிபுணத்துவம் பெற்றவர்



ஆவார். தற்போது இவர், குடியரசு கட்சி தேசிய குழுவில் எதிர்க்கட்சி ஆராய்ச்சி பிரிவின் தலைமை பதவியிலுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது, ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் எதிர்ப்பு பிரசாரத்தில் முக்கிய பங்கு வகித்தார். அவருக்கு எதிரான ஆராய்ச்சியை ராஜ் ஷா தலைமையிலான குழுதான் மேற்கொண்டது.

இவரது நியமனம் பற்றி வோஷிங்டன் வெள்ளை மாளிகை ஊழியர்களின் தலைமை பொறுப்பில் அமர உள்ள ரெயின்ஸ் பிரீபஸ் கூறும்போது, "ராஜ் ஷா உள்ளிட்டவர்களின் நியமனங்களை ட்ரம்ப் கடந்த புதன் கிழமை செய்தார். இவர்கள் ஜனாதிபதியாக பதவி ஏற்க உள்ள ட்ரம்பின் திட்டங்களை செயற்படுத்துவார்கள். வோஷிங்டனில் உண்மையான மாற்றங்களை கொண்டு வருவார்கள்" என்று குறிப்பிட்டார். ராஜ் ஷாவின் பூர்வீகம் குஜராத். அவரது குடும்பம் அங்கிருந்து மும்பைக்கு குடிபெயர்ந்து அங்கிருந்து அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்ததாகும்.

ராஜ் ஷா கனெக்டிகட் மாகாணத்தில் பிறந்து வளர்ந்தவர். ட்ரம்பின் கீழ் அவர் நேரடியாக பணியாற்றப்போவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிலிப்பைன்சில் சிறைத் தகர்ப்பு 158 கைதிகள் தப்பியோட்டம்

பிலிப்பைன்ஸ் நாட்டில் சிறையிலிருந்து 158 கைதிகள் தப்பி ஓடினர், அவர்களில் 34 பேரை பொலிஸார் தேடிப் பிடித்து மீண்டும் சிறையிலடைத்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் தெற்கு மணிலாவில் இருந்து 930 கிலோ மீற்றர் தொலைவில் கிடாபாவன் எனும் இடத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு பல்வேறு வெடிகுண்டுத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட கிளர்ச்சியாளர்கள் உள்ளிட்ட 1511 பேர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெளியிலிருந்து 12 பேர் ஆயுதங்களுடன் சிறையில் அதிரடியாக புகுந்து பொலிஸ் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் அதிர்ச்சியடைந்த பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த களேபரத்தை பயன்படுத்தி 158 கைதிகள் சிறையிலிருந்து தப்பித்துச் சென்றனர். மேலும் இக்கலவரத்தில் ஒரு பொலிஸ், அப்பகுதியைச் சேர்ந்த நபர் மற்றும்5 கைதிகள்பலியாகினர்.

பின்னர் தீவிர தேடுதல் நடத்திய பொலிஸ் 34 பேரை கைது செய்து மீண்டும் சிறையில் அடைத்தனர். மேலும் மற்ற கைதிகளை தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

கொரில்லா தாக்குதல் நடத்தும் கிளர்ச்சியாளர்கள் சிறைத்தகர்ப்பில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் அந்நாட்டில் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தச் சிறையில் 2007 ஆம் ஆண்டிற்கு பிறகு மூன்றாம் முறையாக தாக்குதல் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# தவளை இளவரசன்

."ஒரு சொறித்தவளையப்பா அது! இன்று குளத்துக்குள் விழுந்த என் பந்தை அது எடுத்துக் கொடுத்தது.

அதற்கு ஒரு வாக்கு கொடுத்தேன் அதனால் அது இங்கே வந்து நியாயம் கேட்கிறது. "என்று விபரம் சொன்னாள்.

"என்ன பெண்ணம்மா,நீ! யாருக்கும் நாம் வாக்கு கொடுத்தால் அதன்படி நடக்கவேண்டும். பிறருக்கு நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அது தவளையாகவே இருந்தாலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமம்மா,"என்று புத்திமதி சொன்னார்.

அப்போது மீண்டும் கதவைத் தட்டும் ஓசையும் தொடர்ந்து தவளை பாடும் பாட்டும் கேட்டது.

"என் அருமை இளவரசியே, கதவைத் திறவாய். உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார். உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ சொன்ன வாக்கு தவறாமல் காப்பாற்ற வேண்டாமா? - "அந்தத் தவளையைப் புலம்ப வைத்து விட்டாயே. அது சரியல்ல அது நீ கேட்ட உதவியைச் செய்து கொடுத்தது. அதற்கு பதிலாக தவளை கேட்டதை நீயும் ஒப்புக்கொண்டிருக்கிறாய். அதனால் வாக்கு கொடுத்தபடி கதவைத் திறந்து உள்ளே அழைத்துவா,"என்று அரசர் தன் மகளுக்குச் சொன்னார்.



வேறு வழியில்லாமல் இளவரசி கதவைத் திறந்து தவளையை அழைத்து வந்தாள். இளவரசி அமர்ந்து சாப்பிடும் நாற்காலியில் தவளை தாவி ஏறியது.

"நீ சாப்பிடும் தட்டு அருகே என்னை உட்கார வைநானும் சாப்பிட வேண்டும்," என்றது தவளை.

இளவரசியும் மனமின்றி தவளையை எடுத்து தான் சாப்பிடும் தங்கத் தட்டு அருகே வைத்தாள். இப்போது இளவரசி சாப்பிடும் தட்டிலேயே தவளையும் சாப்பிட ஆரம்பித்தது.

தவளை சாப்பிட்டு முடித்ததும்,"நான் மிகவும் களைப்பாக இருக்கிறேன்.

என்னை எடுத்துக்கொண்டு போய் உன் படுக்கையில் படுக்க வை,"என்றது.

வேறு வழி இல்லாமல் இளவரசி தவளையை எடுத்துக்கொண்டு போனாள்.

தன் படுக்கையில் படுக்க வைத்தாள். தவளையும் சுகமாக இரவு முழுக்க தூங்கியது.

காலையில் சூரிய வெளிச்சம் வந்தவுடன் தவளை விழித்துக் கொண்டது.

உடனே கட்டிலில் இருந்து கீழே குதித்தது. மாடிப்படிக்கட்டில் இறங்கி அரண்மனையை விட்டு வெளியேறியது.

தவளை போன பிறகு இளவரசி விழித்தெழுந்தாள். தவளை அருகில் இல்லையென்றதும் மிக மகிழ்ந்தாள், இளவரசி. இனி தவளை பற்றிய கவலை இல்லை என்று நினைத்ததில் வியப்பு எதுவும் இல்லை தான்.

இரவு வந்தது தவளையும் திரும்ப வந்தது. நேற்றுப் போலவே சத்தம் எழுப்பிக் கதவைத் தட்டியது தவளை அடாடா, தவளை வந்துவிட்டதே என்று கவலைகொண்டாள். இளவரசி. இளவரசி என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது தவளை பாடத் துவங்கியது.

"என் அருமை இளவரசியே, கதவைத் திறவாய், உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார், 'உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ சொன்ன வாக்கு தவறாமல் காப்பாற்ற வேண்டாமா?"

தவளையின் பாடலைக் கேட்ட அரசர்,"உன் தவளை நண்பன் வந்துவிட்டான்போய் அழைத்துவா,"என்று செல்லமாகவும் கண்டிப்போடும் சொன்னார்.

வேறு வழியின்றி கதவைத் திறந்து இளவரசி, தவளையை அழைத்து வந்தாள்.

(தொடரும்...)

# 01.2017 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1325 - போர்த்துக்கல் மன்னனாக நான்காம் அல்ஃபொன்சோ முடிசூடினான்.
- 1558 - காலே (Calais) நகரத்தை இங்கிலாந்திடம் இருந்து பிரான்ஸ் கைப்பற்றியது.
- 1598 - ரஷ்யாவின் ஆட்சியை போரிஸ் கூதுனோவ் கைப்பற்றினான்.
- 1608 - வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுண் நகரம் தீயினால் அழிந்தது.
- 1610 - கலிலியோ கலிலி ஜூபிட்டர் கோளின் நான்கு துணைக்கோள்களைக் கண்டறிந்தார்.
- 1782 - அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கி வட அமெரிக்க வங்கி திறக்கப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவில் முதற்தடவையாக அரசுத் தலைவர் தேர்தல் இடம்பெற்றது.
- 1841 - யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1894 - வில்லியம் கென்னடி டிக்சன் அசையும் படத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1927 - அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசிச் செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப்பப்பட்டது.
- 1935 - முசோலினி மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பியேர் லாவல் ஆகியோர் பிரெஞ்சு-இத்தாலிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
- 1950 - அயோவாவில் மருத்துவ மனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 41 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 - பிடல் காஸ்ட்ரோவின் புதிய கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.
- 1968 - நாசாவின் சேர்வயர் 7 விண்கலம் ஏவப்பட்டது.
- 1972 - ஸ்பானிய விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 104 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - வியட்நாமியப் படைகளிடம் கம்போடியாவின் தலைநகர் புனோம் பென் வீழ்ந்தது. பொல் பொட்டும் அவனது கெமர் ரூச் படைகளும் பின்வாங்கினர்.
- 1984 - புரூணை ஆசியான் அமைப்பில் 6வது உறுப்பு நாடாக இணைந்தது.
- 1990 - பீசாவின் சாய்ந்த கோபுரத்தின் உட்பகுதி பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பொதுமக்களின் பார்வைக்கு மூடப்பட்டது.
- 2006 - திருகோணமலையில் இலங்கைக் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 15 படையினர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1502 - பதின்மூன்றாம் கிரகோரி (திருத்தந்தை). (இ. 1585)
- 1831 - ஈன்றிக் வொன் இசுட்டீபன், அஞ்சல் ஒன்றியத்தைத் தோற்றுவித்த செருமானியர். (இ. 1897)
- 1844 - பெர்னதெத் சுபீரு, பிரெஞ்சுப் புனிதர் .(இ.1879)
- 1925 - தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்ப்பாணத்தின் சமூக சேவையாளர்.
- 1938 - பி. சரோஜாதேவி, இந்திய திரைப்பட நடிகை.
- 1943 - சடாகோ சசாகி, இரோசிமா, நாகசாக்கி அணுகுண்டு வீச்சில் பாதிக்கப்பட்டவர் . (இ.1955)
- 1948 - இசிரோ மிசுகி, யப்பானியப் பாடகர்.
- 1953 - பாக்கியராஜ், திரைப்பட இயக்குநர், நடிகர்.
- 1964 - நிக்கோலஸ் கேஜ், அமெரிக்க நடிகர்.
- 1979 - பிபாசா பாசு, இந்திய நடிகை.

**இறப்புகள**

- 1943 - நிக்கோலா தெஸ்லா, செர்பிய அமெரிக்க இயற்பியலாளர் . (பி. 1856)
- 1989 - இரோகிட்டோ, யப்பானிய மன்னர் . (பி. 1901)
- 1995 - முரே ரோத்பார்ட், அமெரிக்கப் பொருளியலாளர் . (பி. 1926)
- 2011 - சிலோன் சின்னையா, இலங்கைத் தமிழத் திரைப்பட நடிகர் . (பி. 1941)

**சிறப்பு நாள்**

- கிறித்துமசு (கிழக்கு மரபுவழி திருச்சபை யூலியன் நாட்காட்டியில்).
- இனப்படுகொலை நாளில் இருந்து வெற்றி நாள் - (கம்போடியா).

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 30 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 200 | 120 | 200 | 160 |
| தக்காளி | 160 | 160 | 120 | 160 | 160 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 60 | 70 | 80-120 | 90 | 120 | 80 |
| பூசணி | 60 | 80 | 35 | 80 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 80 | 50 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 80 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 280 | 400 | 220 | 240 | 270 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 70 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 120 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 130 | 160 | 130 | 240 | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 200 | 170 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 400 | — | 400 | — | 460 | 400 | — |
| போஞ்சி | 80 | 100 | 60 | 100 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்பள்ள | 20 | 20 | 20 | 30 | — | 40 | 30 |
| கீரை-1பிடி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 280 | 250 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-60 | 50 | 40 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 250 | 200 | 150 | 250 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 150 | 200 | 240 | 240 | 200 |
| முள்ளங்கி | 60 | 50 | 40 | 60 | 60 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 15 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 40 | 60 | 120 | 60 |

# சிவத்தமிழ் செல்வி அம்மையார் நிறுவிய அறநிதிய சபை



சிவத்தமிழ் செல்வி அம்மையார் மறைந்து ஒன்பது ஆண்டுகள் கடந்தோடி விட்டன.இன்று அம்மையாரின் 92ஆவது பிறந்தநாள். அறநிதியவிழா நடைபெறுகின்றது. அன்பால் எமையாண்ட சிவத்தமிழ் செல்வி அம்மையார் நற்பெருந்தெய்வமாக நல்வழிகாட்டியாக சர்வதேய அடியார்களையும் உள்வாங்கியவர்.நீர் உயர நெல் உயரும் என்றார் ஔவைப் பிராட்டியார். அம்மையாரும் துர்க்கை அம்மன் கோவிலை உயர்த்த எல்லோரும் உயர்ந்தனர்.சமுதாய வெள்ளத்தில் இணைந்துள்ள அம்மையாரின் தர்மமும் கல்வி சம்பந்தமானது.

இதனால் பெண் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை ஸ்தாபித்தார். நாவலரும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஐந்தாண்டு திட்டத்தை நிறுவினார்.

சிவத்தமிழ் செல்வி அம்மையார் தமது பிறந்தநாளை அறநிதிய விழாவாக மாற்றி ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 7ஆம் திகதியில் அறக்கொடை வழங்க ஏற்பாடு செய்தார். இதன் பெறுபேறாகவே 1988 ஆம் ஆண்டு சிவத்தமிழ் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கினார்.

இச்சபையின் நிதி ஆண்டு தோறும் ஒவ்வொரு கல்வி வலய மாணவர்களுக்கு கல்வி கொடையாகவும் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை என்பனவற்றுக்கு வைத்தியப் பணிக்காகவும் வழங்கப்பட்டு வருகின்றது. இதேபோன்று பெரியோர்கள், சான்றோர்கள் கௌரவம் நடைபெற்று வருகின்றது.

திருவருளால் நமக்கு கிடைத்த சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் மனிதநேய அறச் சிந்தனைகளின் அருமை பெருமைகளை சிந்திக்கின்றோம். இவற்றை எல்லாம் இன்றைய சர்வதேச புலம்பெயர் சமூகத்தினால் பேசப்படுகின்றன. அம்மையார் நிறுவிய அறநிதிய் செயற்பாட்டுக்களைச் சிந்திப்போமாக.

கா.சிவபாலன்

## அன்னை ஓர் ஆன்மீக அடையாளம்





தாழாத கீர்த்தியும் தவறாத ஒழுக்கமும்
தவமுடைய சமய வாழ்வும்,
தருமநெறி பிசகாத திவ்ய பரிபாலினி
தங்கம்மா எனுந் தலைவியே
ஏழாந்திகதி தையில் அறமோங்க வழி சமைத்த
இறவாத பேறுடையாள்
என்றைக்கும் அம்பாளை மறவாத உபகாரி
இலங்கையின் ஆன்மீக அடையாளம்
வீளாமல் கொள்ளாமல் வில்லங்கம் இல்லாமல்
வீறு கொள்ளப் பணி புரிந்தார்
விருது பல தாங்கியே அருமை தரு பெருமைகளை
வீர துர்க்காவிடம் அளித்தார்
சூழாமல் கொடு வினைகள் ஓடியே போய்விட
சூர்ய நமஸ்காரம் செய்வார்,
தொல்புகழ் தெல்லியூர் வென்று அறமாகிட
துர்க்கையைப்பேறாக்கினார்!

கே.எஸ்.சிவஞானராஜா













அகில இலங்கை தமிழ் காங்கிரசின் முன்னாள் தலைவரும், மனிதவுரிமை செயற்பாட்டாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவு தினம் இரு இடங்களில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு தினங்கள் கந்தர்மடத்தில் உள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்திலும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திலும் நடைபெற்றுள்ளது. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தில் அவருடைய ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் போட்டி ஆரம்பிக்கும் முன் விளக்கேற்றி மௌன வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உபதலைவர் வின்சன் டிப்போல் மற்றும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக செயலாளர் ப.சுரேஸ் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தனர்.பருத்தி நகரில் வர்த்தகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விளக்கேற்றி இரு நிமிடம் மௌன வணக்கத்துடன் அஞ்சலி செலுத்தினர். இதேபோன்று மாலை நான்கு மணியளவில் கந்தர்மடத்தில் உள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கட்சி ஆதரவாளர்களின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.முன்னதாக மாமனிதருக்கு மௌன அஞ்சலி இடம்பெற்று அதன் பின்னர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலிகளும் இடம்பெற்றன. இந்த நிகழவில் கட்சி ஆதரவாளர்கள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். இவர் அகில 'இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் நிறுவனர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மகனாவார். குமார் பொன்னம்பலம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

(படங்கள்:-உ.சாளின், பொ.சோபிகா)

# குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளவும்

## யாழ்.அரச அதிபர் கோரிக்கை

யாழில் இம்முறை குடிநீர் விநியோகம் அதிகளவு மேற்கொள்ளவிருப்பதால் குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி விவசாயத்தினை மேற்கொள்ள விவசாயிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயக்குழு கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு நிலத்தடி நீர்வளமே நீர் ஆதாரம். இம்முறை பருவமழை பொய்த்ததன் காரணமாக எதிர்வரும் மார்ச் மாதம் முதல் குடிநீர் விநியோகம் செய்யும் நிலை ஏற்படலாம்.

எனவே விவசாயத்திற்கு பயன்படுத்தும் நீரின் அளவையும் குறைக்க வேண்டியுள்ளமையினால் அதற்கேற்ற பயிர்களை பயிரிட வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

மேற்குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் துறைசார் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயக் காப்புறுதி,வங்கிக்கடன், தென்னை மற்றும் பனை அபிவிருத்தி விவசாய ஆராய்ச்சிகள் நீர்ப்பாசனம் விதை உற்பத்தி எதிர்வரும் காலங்களில் பயிரிடவேண்டிய பயிர்கள் மற்றும் இயற்கை முறையில் விளைச்சலை அதிகப்படுத்தக்கூடிய உத்திகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர். (இ-9)





"வனத்திவிமித்ரு" எனும் வனவள பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலாளர்கள், வனவள திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஷாந்த, கால்நடை வைத்தியர் பி.கிரிதர் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

# வவுனியா மாவட்டத்தில் விவசாய நடவடிக்கையில்

# வரட்சியின் தாக்கத்தை எதிர்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு





வவுனியா மாவட்டத்தில் 2016-2017 கால போகத்தில் எதிர்பார்த்த மழைவீழ்ச்சி கிடைக்காமை காரணமாக கால போக நெற்செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனவே இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையின் கீழ் உதவி கமநல சேவை ஆணையாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், ஏனைய திணைக்களத்தின் களநிலை உத்தியோகத்தர்கள், வவுனியா மாவட்ட விவசாய சம்மேளன தலைவர்கள் ஆகியோரின் பங்கு பற்றலுடன் கமநல சேவை திணைக்களங்களின் கீழ் உள்ள கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகளுடனும் அவசர விழிப்புணர்வு கலந்துரையாடல் நடைபெற்றன. இதற்கமைய கடந்த டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி கோவில்குளம்,ஓமந்தை, பம்பைமடு, செட்டிகுளம்,மடுக்கந்தை கமநல சேவை நிலையங்களிலும் மறுநாள் நெடுங்கேணி, கனகராயன்குளம் கமநல சேவை நிலையங்களிலும் பாவற்குள விவசாயிகளுடனும் கலந்துரையாடல்களும் விழிப்புணர்வு கூட்டங்களும் நடைபெற்றன.

இதில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் வழங்கப்பட்டு கிராம மட்டத்தில் அல்லது குளத்தின் கீழ் தீர்மானங்கள் எடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் தற்போதுள்ள நீரின் அளவுக்கு ஏற்ப அதி உயர் கண்காணிப்பின் கீழ் தேவையான பயிர் வளர்ச்சிநிலைகளுக்கேற்ப தேவையான அளவு நீரை ஏக்கருக்கு குறித்த மணித்தியால அளவுகளில் வழங்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

நீர்ப்பாசன இடைவெளியை அதிகரிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

குளத்திலுள்ள நீர் முற்றுமுழுதாக பயிர்களை காப்பாற்ற போதாது விடின் ஒரு பகுதியை காப்பாற்றுவதற்கு பின்வரும் காரணிகளை கருத்தில் எடுத்து காப்பாற்றப்படும் பகுதியை தீர்மானித்தல். இதன் மூலம் கைவிடப்படும் காணிகளுக்கு நிவாரண நடவடிக்கை அல்லது அடுத்துவரும் போகத்தில் முன்னுரிமை, காப்பாற்றப்படும் காணி மூலம் இழப்பீடு வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1.வளர்ச்சியின் இறுதிக் கட்டத்திற்கு வந்த 2 மாதத்தில் அல்லது அதிலும் கூடிய வயதுடைய பயிர்கள்

2.களைகள் அற்று சிறப்பாக வளர்ச்சியைக் காட்டும் வயல்கள்

3.நீர் நிலைக்கு அருகில் நீர் விரயமின்றி காப்பாற்றக் கூடிய பயிர்கள்

4.விதை நெல்லுக்கு பாவிக்கக்கூடிய பயிர்கள்

மாற்று நீர் மூலங்கள் அதாவது அருகில் கழிவு வாய்க்கால்களில் அல்லது கிணறுகளில் நீர் இருப்பின் அவற்றை பயன்படுத்தி பயிரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

இவற்றுக்கு எரிபொருள், வாய்க்கால்களை தடைசெய்வதற்கு சாக்கு ; நீர்ப்பம்பிகளின் தேவை பட்டியலை தயாரிக்குமாறு ஒவ்வொரு கமநல சேவை பிரிவுகளுக்கும் கள உத்தியோகத்தர்கள், கமக்கார பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

தற்போது தெற்போட்ட மழை காணப்படுவதால் மழை கிடைக்கும் நேரத்தில் குளத்து நீர் கதவுகளை பூட்டி மழை நீரை உச்சமாக பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கிணறுகள் அமைப்பதன் மூலம் குறிப்பிட்ட ஏக்கருக்கு மேற்பட்ட பயிர்களை அதன் இறுதிக் கட்டத்தில் காப்பாற்ற முடியும் என கருதின் அந்தக் குழுவின் சிபார்சுக்கு அமைய கிணறுகள் அமைப்பதற்கான அனுமதி வழங்குவது பற்றி பரிசீலிக்க முடியுமென தீர்மானிக்கப்பட்டது.

தற்போது கைவிடப்பட்ட நெற்காணிகள் பயிர் அல்லது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாத நெற்காணிகளில் குறைந்த கால வயதுடைய எள்ளு, உழுந்து, பாசிப்பயறு, கௌபி போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட தீர்மானங்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கும் தெரியப்படுத்த கிராமமட்ட கூட்டங்களை அவசரமாகக் கூட்டி தீர்மானங்கள் மேற்கொள்ளுமாறும் கலந்துரையாடப்பட்டது. (2)

# குஞ்சுக்குளத்தின் அபிவிருத்திப் பணியை சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் பகுதியில் காணப்படுகின்ற குஞ்சுக்குளமானது மிக நீண்ட காலமாக நிரந்தர அபிவிருத்தி இன்றி காணப்படுவதாகவும் காலத்திற்கு காலம் அக்குளத்தினுடைய அபிவிருத்தி என்ற பெயரில் பகுதியளவான அபிவிருத்தி வேலைகளே மேற்கொள்ளப்படுவதால் மீண்டும் மீண்டும் அக்குளமானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது என பிரதேச விவசாயிகள், பொது மக்கள் ஆகியோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆகவே இக்குளத்தினுடைய அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட அதிகாரிகள், நிறுவனங்கள் இதனை கருத்தில் எடுத்து இனிவரும் அபிவிருத்தி வேலையையாவது நிரந்தரமான அபிவிருத்தியாக மேற்கொள்வது தொடர்பில் கவனமெடுக்க வேண்டுமென விவசாயிகள் மற்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



அத்துடன் இக்குளத்தை முழுமையாக புனரமைத்தால் இக்குளத்திலிருந்து முள்ளியவளை முதலாம் வட்டாரம் ,முள்ளியவளை நான்காம் வட்டாரம் ,பள்ளவெளி ,வற்றாப்பளை மற்றும் துறையடிப் பகுதிகளில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை பூரணமாக மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப் படுகின்றது. (2-310)

# கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்

வவுனியா ஏ-9வீதி மூன்று முறிப்பு சந்தியில் நேற்று முன்தினம்இரவு கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுளளார்.

வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனையின் போது 300 மில்லி கிராம் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

# வைகுந்த ஏகாதசிப் பெருவிழா

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பகலும் இரவும் சிறப்பாக நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இதற்கமைய அன்றையதினம் மாலை 6 மணிக்கு விசேட பூசை நடைபெற்று தொடர்ந்து 7 மணிக்கு சமயக் கேள்வி பதிலும் பரிசளிப்பும் இடம்பெறும்.

பின்னிரவு 3 மணிக்கு வைகுந்த வாசல் திறப்பும் சுவாமி தரிசனமும் நடைபெறும். (2)

# ஆசிரிய மத்திய நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது



கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் 28.05 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள ஆசிரிய மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் மாகாணக் கல்வி அமைச்சினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கான ஆசிரிய மத்திய நிலையம் 28.05 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர்கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த நபர் கைது

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா பொலிஸ் நிலைய பிரிவில் உள்ள தவசிக்குளம் பகுதியில் வைத்து கேரளக் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டுதலில் பொலிஸ் அணியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது போதைப்பொருட்களைத் தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது கேரள கஞ்சா -755 கிராம் மற்றும் 1 கிராமும் 625 மில்லிகிராம் நிறையுடைய மாபா எனப்படும் போதைப்பொருள் கலந்த பாக்கும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதானசந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தகவலில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

யார் பேசினாலும் பொய் பொய் தான்.
- ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பெரிய கோட்டை சிறிய கோடாகக் காட்டுதல்

பூதாகாரம் என்ற தமிழ்ப்பதம் பற்றி பலரும் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால், தமிழ் மொழியில் ஒரு பெரும் அர்த்தத்தை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு சொல் தான் பூதாகாரம் என்பதாகும்.

சிறிய விடயத்தை பெரிது படுத்துவதை இச் சொல் குறித்துநிற்கும். பூதாகாரம் என்ற சொல்லின் பொருள் பலருக்குத் தெரியாதாயினும் அந்தச் சொல் குறித்து நிற்கும் பொருள் பலரையும் இடைஞ்சல் படுத்தியுள்ளதுடன் பெரும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக பூதாகாரம் என்ற சொற்பதம் அரசியலுக்கு மிகவும் பரீட்சயமானது. சிறிய விடயத்தை பெரிதுபடுத்தி அரசியல்வாதிகள் வாதம் நடத்துவதை பார்க்கும்போது, அடேங்கப்பா! மிகப்பெரியதொரு பிரச்சினையை எடுத்து அக்கு வேறு ஆணிவேறாக பிய்க்கின்றார்கள் என்று எண்ணத்தோன்றும்.

ஆனால், அதற்குள் எதுவுமே இருக்காது. இப்படியான சம்பவங்களுக்கு இலங்கை அரசியலில் பஞ்சமே கிடையாது எனலாம்.

அது சரி; இப்போது பூதாகாரம் என்பது இங்கு எதற்காக? நீங்களும் சிறிய விடயத்தை பூதாகாரமாகப் பார்கின்றீர்களா? என்ற உங்கள் முணு முணுப்பும் நம் செவிகளில் முட்டுகிறது.

எல்லாம் காரணத்தோடுதான். அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவேண்டிய காலகட்டம் நெருங்கும் வேளையில், புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் வெளிவர இருக்கின்ற வேளையில் – ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும்; முடிந்தால் கவிழ்த்துப்பார் என்று ரணில் தரப்பும் மோதுகின்றன.

ஆட்சியைக் கவிழ்ப்பது என்ற மகிந்த ராஜபக்ஷவின் சபதம் நிறைவேறுவது என்பது உடனடிச் சாத்தியம் இல்லை என அனைவருக்கும் தெரியும்.

இருந்தும் நல்லாட்சியில் முன்வைக்கப்படும் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் அதிககவனம் கொண்டால்; அது இலங்கை ஆட்சியாளர்களுக்கு அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல என்ற அடிப்படையில்,

கவனக்கலைப்பானாகவே ஆட்சிக்கவிழ்ப்பு என்ற விடயம் முகிழ்ப்படைந்துள்ளது.

அட! முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்க்கப்போகிறாராம். அது நடக்கவே மாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பு உறுதியாக இருக்கிறதாம். என்ன நடக்குமோ! ஏது நடக்குமோ! என்ற ஒரு ஏக்க நிலையை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

ஆட்சியைக் கவிழ்ப்பது என்பதை விட ஆட்சியை ஒப்படைக்காமல் விடுவது என்பதே மகிந்த ராஜபக்ஷவுக்கு சாத்தியமான விடயமாக இருந்தது.

எனினும் சில தொலைபேசி அழைப்புகளை அடுத்து ஆட்சியை ஒப்படைத்து விட்டு அம்பாந்தோட்டையில் உள்ள தன்வீட்டிற்கு சென்றவர் மகிந்த ராஜபக்ஷ.

இவ்வாறு வெறுங்கையோடு அம்பாந்தோட்டைக்கு சென்றவர் இனி எழுந்து வந்து ஆட்சியைக் கவிழ்ப்பது சாத்தியமா என்ன?

அவ்வாறு ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டால் அமெரிக்கா சும்மா பார்த்துக்கொண்டா இருக்கும் இது போன்ற கேள்விகள் எழுந்தாலும் ஆட்சிக் கவிழ்ப்பு என்ற விடயம் சிறிது காலத்திற்கு பேசுபடு பொருளாகவே இருக்கப்போகிறது.

ஆம்! இனப்பிரச்சினைக்கான தீர்வு – புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் இவைவெளிவரவிருக்கின்ற நேரத்தில் வேறொரு பிரச்சினையை பூதாகாரப்படுத்தி அத்றகு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை தமக்கு சாதகமாகவும் இனப்பிரச்சினை தீர்வில் நல்லாட்சிக்கு விருப்பம் இருந்தாலும் ஆட்சிக்கவிழ்ப்பு என்பது நல்லாட்சிக்கு அச்சுறுத்தலாக இருப்பதாலும் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறித் தப்பிவிடலாம் அல்லவா? இதற்காகவே எல்லாம் நடக்கிறது என்பதே நிஜம்.

# 26 துவிச்சக்கரவண்டிகள் 22 வயது நபரிடமிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டி திருட்டுடன் தொடர்புடைய 22 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்த யாழ்ப்பாண பொலிஸார் அவரிடம் இருந்து 26 துவிச்சக்கர வண்டிகளையும் நேற்று முன் தினம் மீட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களாக இடம்பெற்று வந்த துவிச்சக்கர வண்டி திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட நபரை பொலிஸார் தேடி வந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் அரியாலை பகுதியைச் சேர்ந்த நபர் எனவும் கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் குறித்த சைக்கிள்களை மறைத்துவைத்த நிலையிலே பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் மேலும் 30 துவிச்சக்கர வண்டிகள் மறைத்து வைத்துள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்றள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-9)

# ஆடலரங்கம்

நர்த்தன ஷேத்திராவின் மார்கழி மகா உற்சவம் ஆடலரங்கம்-05 யாழ்ப்பாண திருமறைக்கலாமன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை 8ஆம் திகதி·பி.ப.3மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜனின் ஆசியுரையும் யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீமதி ஞானசக்தி கணேசநாதனின் தலைமையுரையும் இடம்பெறும். (இ-7)

# அஞ்சலிக்கூட்டம்

அண்மையில் காலமாகிய முற்போக்குக் கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியின் அஞ்சலிக்கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

எழுத்தாளர் க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அஞ்சலி உரைகளை கவிஞர் சோ. பத்மநாதன் (சோ ப) ,கவிஞர் இ.த. ஜெயசீலன் ,கலாநிதி செ. திருநாவுக்கரசு , சட்டத்தரணி சோ. தேவராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-9)

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த ஆட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மாட்டின் வீதியில் இடம்பெற்றுள்ளது. இதில் வைமன் வீதியைச் சேர்ந்த எஸ்.தனுயன் (வயது-19) என்ற இளைஞனே படுகாயமடைந்தவர். (இ-30)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி ஸ்ரீ பாலமுருகன் சனசமூக நிலையவருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப3 மணிக்கு நிலையத்தலைவர் செ.சின்னத்துரை தலைமையில் நடைபெறும். புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் ஆயுள்கால அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-29)

# யோகா அறிமுக நிகழ்வு நல்லூரில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் அமைப்பினர் நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் யோகா புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளனர். இதற்கான அறிமுக நிகழ்வு நாளை 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்.யோகா உலகம் அமைப்பின் யோகக் கலைக்கான ஆசிரிய ஆலோசகர் பி.சாந்தரூபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்.யோகா உலகம் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகர் நா.நவராஜ் **யோகமும் ஆரோக்கியமும்** என்னும் தொனிப்பொருளிலும் யோகா செயற்பாட்டாளன் எஸ்.உமாசுதன் அட்டாங்க யோகம் என்னும் விடயம் பற்றியும் கருத்துரை வழங்குவார்.

யோகா பயிற்சிநெறி-1 காலை 6மணி தொடக்கம் 7 மணி வரையும் பயிற்சிநெறி -2 மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும் மூன்றாவது பயிற்சிநெறி இரவு -6 மணி தொடக்கம் 7 மணி வரையும் மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடை பெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான யோகாசனம், பிரணாயாமம்,தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசான்களால் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகாப் பயிற்சிகள் பெண் ஆசிரியர்களால் வழங்கப்படும்.நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். கையேடு சான்றிதழ் வழங்கப்படும் ஆர்வமுடைய அனைவரும் அறிமுக நிகழ்விலும் யோகா பயிற்சி நெறியிலும் இணைந்து பயனடைய முடியுமென்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிககிழமை **யாழ்.பிரதேசத்தில** அச்செழு, கரந்தன், நீர்வேலி, மாசிவன், சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், பாண்டியன்குளம், நட்டாங் கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம, கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65வது **Infantry** ஆலங்குளம், துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், **TRC 1, 2 Signal medium work shop,** பனிக்கன்குளம், **CATIC** பனிக்கன்குளம், மாங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைத்தொடர்பு கோபுரம் ஒலுமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம், கூமாங்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** மடுதேவாலயம், பெரிய தம்பனையிலிருந்து வெள் ளாங்குளம், சன்னார் இராணுவ முகாம், முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார்நீர்ப்பாசனத்திணைகளம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, எருக்குப்பிட்டிபம்கவுஸ் மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களில் மின்தடைப்படும்.(இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அழிவு முறையில் அல்லாமல் சந்நியாசி அணியும் காவியுடையினால் இந்தியாவின் நிலை உயர்த்தப்படும். செல்வச் செருக்கினால் அல்லாமல் சந்நியாசியின் பிச்சைப்பாத்திரத்தின் ஆற்றலால் இந்தியாவின் நிலை உயர்வடையும்.

❖ எதிர்கால இந்தியா நமது உழைப்பைப் பொறுத்துத் தான் அமைந்திருக்கிறது. பாரதமாதா தயாராகக் காத்திருக்கிறாள். அவள் உறங்கிக் கொண்டு மட்டும்தான் இருக்கிறான்.

❖ எனது சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. முதலிலேயே பெரிய திட்டங்களைப் போட்டுக் கொண்டு புறப்பட வேண்டாம். நிதானமாக ஆரம்பியுங்கள். ஆழம் பார்த்துக்கொண்டே மென்மேலும் நிதானமாக முன்னேறுங்கள். எழுந்திருங்கள், எழுந்திருங்கள்; நீண்ட இரவு கழிந்து விட்டது. இந்தியாவின் ஒ ளிமயமான எதிர்காலம் என்ற பொழுது புலர்ந்து வருகிறது. அதனுடைய உத்வேகத்தைத் தடுத்து நிறுத்த எதனாலும் ஆகாது.

# NORTHERN CHALLENGERS உதைபந்தாட்டம்

# ஆதிசக்தி குறிஞ்சிக்குமரன் மூன்றாம் சுற்றுக்கு தகுதி






நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் NORTHERN CHALLENGERS-2016 உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (05-01-2017) அன்று நடைபெற்ற போட்டியில் கலட்டி அணியை ஏதிர்த்து குறிஞ்சிக்குமரன் அணி மோதி யது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் குறிஞ்சிக்குமரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

நடைபெற்ற இரண்டாம் போட்டியில் விளான் அன்ரனீஸ் அணியை ஏதிர்த்து விளையாடி ஆதிசக்தி அணி மோதியது. இப்போட்டியில் ஆதிசக்தி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)

## ஸ்கந்தாவை இனிங்ஸால் வென்றது சென்.ஜோன்ஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரி அணியை இனிங்ஸால் வென்றது யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி.

கடந்த இரண்டு நாட்களாக யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ். சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரி அணிக்கும் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் டெஸ்ட் போட்டி இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி 6 விக்கெட்டுக்களை இழந்து 349 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத் தியது. இதில் தோமஸ்கரன் .78 ஓட்டங்களையும் தேவபிரசாத் 52 ஓட்டங்களையும் ஜெனி விஸமின் 50 ஓட்டங்களையும் , யதுசன் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த ஸ்கந்தா 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து இனிங்ஸ் தோல்வியை தழுவிக்கொண்டது.(க)

## புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி









(யாழ்ப்பாணம்)

புத்தூர் கலைமதி வி.க. நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டிகள் இன்று சனிக்கிழமை (07.01.2017) இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாவதாக நடைபெறும் (B) பிரிவு போட்டியில் புத்தூர் வளர்மதி வி.க. எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழகமும் இரண்டாவதாக நடைபெறும் (A) பிரிவு போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க எதிர்த்து ஆவரங்கால் மத்திய வி.கழகமும் மோதவுள்ளது. (க)

# மனோகராவின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

# டயமன்ஸ்- சென். நீக்கிலஸ் பலப் பரீட்சை





வடமராட்சி உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று இரவு 7 மணிக்கு மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு நடைபெறும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ்விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அல்வாய் இளைஞர்விளையாட்டுக்கழகம் நடத்திவரும் அணிக்கு 9பேர் கொண்ட 8ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி அல்வாய் நண்பர்கள் மைதானத்தில் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.இதில் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு போட்டிக்கும் ஆட்டநாயகன் விருதும் சுற்றுத்தொடரில் தொடர் ஆட்டநாயகன்,சிறந்த துடுப்பாட்ட வீரர்,சிறந்த பந்துவீச்சாளர் விருதும் வழங்கப்படும்.

சம்பியன் ஆகும் அணிக்கு 20 ஆயிரம்ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். (க)

- - - - - - -

வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 8 பேர் 9 ஓவர்களைக் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடருக்கு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதிமிக்க வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசில்கள், ஒவ்வொரு போட்டிக்கும் ஆட்டநாயகன் விருதும் சுற்றுத்தொடரின் தொடர் ஆட்டநாயகன், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர் விருதும் வழங்கப்படும்.

பங்குபற்றவிரும்பும் அணிகள்பதிவினைமேற்கொள்ளவும்.

தொடர்புக்கு

உமைசுதன்:- 077 169 7348

டெஸ்மன்:- 077 134 0927

பிரதாப்:- 077 732 3603. (க)

## ஆட்சியை கவிழ்க்க...

க்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலம் ஜனாதிபதியினால் நேற்றைய தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிலர் இந்த அரசாங்கத்தை இந்த வருடத்தில் வீழ்த்திக்காட்டுவதாக சவால் விடுத்துள்ளனர். நான் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன். இந்த அரசாங்கத்தை அவ்வாறு இலகுவில் கவிழ்த்து விட முடியாது. புதிய அரசாங்கத்தை 2020 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குப் பின்னரோ நடைபெறும் தேர்தலில் தெரிவுசெய்து கொள்ள முடியும். அரசியலமைப்பிற்குள் இந்த அரசாங்கத்தை கவிழ்க்கும் முறையும் இல்லை. நாடாளுமன்ற எண்ணிக்கையின்படி இந்த அரசாங்கம் வேறொருவருடையது என்று சிலரால் கூற முடியும். ஆனால் அதனை செயவதற்கும் சபாநாயகரும், ஜனாதிபதியும் அந்தப் பக்கம் இருக்க வேண்டும். அதனையும் இப்போது செய்யமுடியாது. எனவே சபாநாயகர் கரு ஜயசூரியவையும், என்னையும் பிடித்துக்கொண்டால்தான் புதிய அரசாங்கத்தை அமைக்க முடியும். அதனையும் இப்போது செய்யமுடியாது என்றார்.

இதேவேளை அம்பாந்தோட்டையில் சீனா முதலீடுகளை மேற்கொள்வதற்காக 15 ஆயிரம் ஏக்கர் காணியை வழங்கப்போவதாக சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்து வருகின்றார். மேலும் 15 ஆயிரம் ஏக்கர் காணி வேறு மாவட்டங்களில் வழங்க எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

எனினும் அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறி ஜே.வி.பி. ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மற்றும் பிக்குகளும், பிரதேச மக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் 15ஆயிரம் ஏக்கர் காணி வழங்கும் திட்டம் அரசாங்கத்திற்கு கிடையாது என்று ஜனாதிபதி நேற்றைய தினம் தெளிவாக அறிவித்தார்.

எமது சில அமைச்சர்களும் இந்த 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீனாவுக்கு வழங்குவது குறித்து தவறிழைத்துக் கொண்டனர். இது தொடர்பான அனைத்து அதிகாரிகளையும் நான் நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) அழைத்து விளக்கம் கோரினேன். இந்த 15 ஆயிரம் ஏக்கர் வழங்குவது குறித்து இணக்கப்பாடு தொடர்பாக வினவியபோது அவ்வாறு 15 ஆயிரம் ஏக்கர் காணி வழங்கவோ அல்லது அது தொடர்பான ஆவணம் குறித்தோ தீர்மானம் எடுக்கவில்லை என்றார்கள். சீனா மட்டுமல்ல, வேறு நாடுகளுக்கும் இங்குவந்து முதலீடு செய்ய சந்தர்ப்பம் காணப்படுகிறது. அரசியலமைப்பின் ஊடாகவே காணி உறுதியை வழங்காமல் வெளிநாடுகள் வந்து இங்கு முதலிட அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்போம். எனினும் மிகவும் தவறான பிரசாரங்களை சிலர் வெளியிடுகின்றனர். மகாநாயகர்களை சந்தித்தும் சிலர் இதனை கூறுகின்றனர். எந்த நாட்டிற்கும் இந்த நாட்டின் ஒருதுளி இடமாவது சொந்தமாக வழங்க மாட்டோம். எதனையும் மறைத்து செய்யும் பழக்கமும் எனக்கில்லை என்றார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை அடுத்த வாரமளவில் இலங்கைக்கு பெறமுடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.(செ-11)

## பொருத்து வீட்டுக்கு...

மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கில் பொருத்து வீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த பொருத்துவீட்டு திட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அது மக்களுக்கு உகந்ததில்லை என தெரிவித்து அத்திட்டத்தை நிறுத்துமாறு த.தே.கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு பட்ட தரப்பினரிடையே எதிர்ப்புக்கள் இருந்து வரும் நிலையில் மீள்குடியேற்ற அமைச்சினால் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பொருத்து வீட்டுக்கான விண்ணப்பங்கள் பொதுமக்களிடம் நேரடியாக கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொருத்து வீட்டு திட்டத்தை பெற்றுக்கொள்ளா விட்டால் கல்வீட்டு திட்டம் வழங்கப்படாது எனவும் பொருத்து வீடே இனி மக்களுக்கு வழங்கப்படவுள்ளது எனவும் சில அதிகாரிகளால் தெரிவிக்கப்படுவதாகவும், இதனால் குழப்ப நிலையில் தாம் உள்ளதாகவும் பொதுமக்கள் சந்தேகத்தினை தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் நேற்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருத்து வீட்டை விரும்புகிறவர்கள் மாத்திரமே பொருத்து வீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. கல்வீட்டுத்திட்டம் இனிவரும் காலங்களில் வழங்கப்படாது என தெரிவிக்கும் கருத்தில் எந்தவித உண்மையும் இல்லை. கல்வீட்டுத்திட்டம் வழங்கப்படும் நேரத்தில் அவை மக்களுக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பொதுக்கல்லறை...

சரீர பிணையில் செல்ல நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்றையதினம் குறித்த பகுதியில் நிர்மாண பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை சந்தித்து நிர்மாண பணிகளை தற்காலிகமாக கைவிடுமாறு கோரிய பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அவர்களை அழைத்திருந்தனர். தொடர்ந்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் சந்தேக நபர்கள் மீது கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் இலங்கை தண்டனை சட்ட கோவையில் பிரிவு 433 மற்றும் 490 பிரிவுகளின் கீழ்குற்ற முறையான அத்துமீறல் வழக்கினை பதிவு செய்திருந்தனர்.

நேற்று காலை மன்றில் ஆஜரான 6 பேரும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரான போதே நீதவானினால் பிணை வழங்கப்பட்டதுடன் குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் உத்தரவிடப்பட்டது. (செ-15,312)

## சர்வதேச நீதிபதி...

லக்ஷ்மன் யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதி மன்றப் பொறிமுறை அவசியமில்லை என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக தெரிவித்துள்ளார். எமது நாட்டின் நீதிபதிகள் மீது எமக்கு பாரிய நம்பிக்கை உள்ளது. சர்வதேசத்தின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளில் எமது நாட்டு நீதிபதிகளின் தலைமையில் பல வழக்குகள் நடைபெற்றுள்ளன.

விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளை ஈடுபடுத்த வேண்டும் என சில அமைப்பினர் விரும்பலாம். ஆனால் எமக்கு எமது நீதிபதிகள் குறித்து நம்பிக்கை உள்ளது. இந்நாட்டு நீதிபதிகள் பல வழக்குகளை கொண்டு நடத்தி சிறப்பான முறையில் தீர்ப்பு வழங்கியுள்ளனர். எமது நீதிபதிகளின் கடந்த கால செயறபாடுகளை அனைவரும் எண்ணிப்பார்த்தால் அவர்களது திறமை புரியும் என்றார்.(செ-11)

## 16-ம் திகதி மைத்திரி...

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் அது இறுதி நேரத்தில் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஊடகங்கள் மூலம்...

போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

கடந்த இரண்டு மூன்று வாரங்களில் அரசாங்கத்தை கவிழ்க்க பொது எதிரணியினர் முயற்சித்தனர். எனினும் மக்கள் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கவில்லை. எதிர்க் கட்சியினர் ஊடகங்கள் மூலமாக அரசுக்கு எதிராக சில விடயங்களை பெருப்பித்து காட்டி எமது அரசாங்கத்தை கவிழ்க்க நினைத்தனர். இதில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்ற பின்னர் தமக்கு கிடைக்க போகும் தகவல்கள் என்ன என்பதை அறிய சில ஊடகங்களும் அதன் ஆசிரியர்களும் தயாராக இருக்கின்றனர். இவை அனைத்தையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என பிரதமர் தனது கருத்தை தெரிவித்தார். (செ-11)

## புதிய அரசியலமைப்பை...



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்றைய தினம் மாலை 5மணியளவில் ஆரம்பமாகி இரவு 8 மணிவரை கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனது அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கூட்டமைப்பின் நான்கு பங்காளி கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. எனினும் ஒற்றையாட்சியா? சமஷ்டியா? என்பது குறித்து தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் முன்வைத்த மிக முக்கிய விடயங்களான வடக்கு கிழக்கு இணைப்பு கைவிடப்பட முடியாதது. வடக்கு கிழக்கு இணைப்பு என்பது ஒன்று இல்லாத அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ள முடியாதது. புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சிக்குள் அதிகார பரவலாக்கல் மட்டுமே நடக்கும். ஆகவே ஒற்றையாட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதே போன்று தமிழ் மக்களின் இறைமை, சுயநிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். என்ற விடயங்களை ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஆகியன முன்வைத்தன.

இதற்கு பதிலளித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், வடக்கு கிழக்கு இணைப்பு குறித்து முஸ்லிம்கள் பேசுவதற்கு பின் நிற்கின்றார்கள். நாங்கள் தான் பேசிக் கொண்டு உள்ளோம் என கூறினார். இதற்கு பதிலளித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இது முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல.

ஒரு நாடு சம்பந்தப்பட்ட பிரச்சினை எனவே இது தொடர்பில் தமிழ் முஸ்லிம் மக்கள் தான் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பில் முஸ்லிம்களுக்கு என்ன பிரச்சினை உண்டு. அதே போன்று தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை உண்டு? என்பது ஆராயப்பட வேண்டும். இறுதி முடிவு எடுக்கப்படும் போதும், வடக்கு கிழக்கு இணைப்பில் முஸ்லிம் மக்களுக்கு விருப்பமில்லை என்றால், கிழக்கில் உள்ள தமிழ் கிராமங்கள் அனைத்தும் வடக்குடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

மாறாக வடக்கு கிழக்கினை நிரந்தரமாகவே பிரித்து வைத்திருப்பது என்ற தீர்மானத்தை தெற்கில் உள்ளவர்கள் கொண்டுவர முடியாது என வலியுறுத்தி கூறியிருந்தார். இவை இல்லாமல் வருகின்ற அரசியலமைப்பு கிழக்கு மாகாணத்திற்கு தனியாகவும் வடக்கு மாகாணத்திற்கு தனியாகவும் வருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் புளொட் மற்றும் ரெலோ ஆகியவற்றினால் வலியுறுத்தப்பட்டன. ஒற்றை ஆட்சி என்பதற்கு பதிலாக ஒரு தேசம் என்ற பதம் புதிய அரசியலமைப்பில் கொண்டுவரப்படவுள்ளதாக இதன் போது எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் கூறினார்.

எனினும் இது இவ்வாறு இருக்க முடியாது. ஒரு தேசம் என சிங்களத்தில் கூறப்படும் போது அது ஒற்றையாட்சி எனவும் கருத்துப்படும். சமஷ்டி இல்லை என்று அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டால், ஒற்றை ஆட்சியும் இல்லை என்றும் தெளிவாக கூறப்பட வேண்டும். லேபிள்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அதன் கருப்பொருளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும். ஒற்றையாட்சிக்குள்தான் அதிகார பரவலாக்கல் என்றால் கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ள கூடாது என அனைத்து பங்காளி கட்சிகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் சிங்களத்தில் ஒரு தேசம் என்று தான் உள்ளது. ஆகவே அது ஒற்றையாட்சி அல்ல என வியாக்கியானப்படுத்தப்பட்டுள்ளது என சம்பந்தன் இதற்கு தெளிவுபடுத்தினார். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பங்காளி கட்சிகளால் வலியுறுத்தப்பட்டது. இலங்கை முழுவதும் மத சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் வடக்கு கிழக்காவது மதசார்பற்ற பிரதேசமாக இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிரதேசம். எனவே இங்கும் பௌத்தத்திற்கு முன்னுரிமை தேவையில்லை. இவை புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கத்திற்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும், அந்த பேச்சுவார்த்தையில் வரக்கூடிய விடயங்கள் அரசியல் சாசனத்தில் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

எனினும் இந்த கோரிக்கை தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச்செயலாளர் மாவை.சேனாதிராஜா, ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மௌனம் காத்தனர். இதன்போது இந்த முடிவுகள் இல்லாமல் அரை குறை கோரிக்கைகளை ஏற்று அரசோடு இணைந்து செயற்படுவது தமிழ் மக்களின் கோரிக்கைகளை வலுவிழக்க செய்யும் எனவும் பங்காளி கட்சிகளால் கூறப்பட்டது. இதற்கு பதிலளித்த சம்பந்தன், வடக்கு கிழக்கு இணைப்பு அவசியமானது எனவும், தமிழ் மக்களின் அபிலாசைகளை கோரிக்கைகளை நிறைவேற்றாத அரசியலமைப்பை கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது எனவும் திட்டவட்டமாக கூறியிருந்தார்.

இந்த சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன், கிழக்குமாகாண சபை உறுப்பினர் துரைரட்ணமும், ரெலோ சார்பாக சட்டத்தரணி சிறிகாந்தா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், உபதலைவர் ஹென்றி மகேந்திரன், ஜனா கருணாகரன் ஆகியோரும், தமிழரசு கட்சி சார்பாக எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஆகியோரும் புளொட் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், ராகவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## அம்பாந்தோட்டை...

நாட்களுக்கு அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த, நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் 26 பேருக்கு இது தொடர்பில் தனிப்பட்ட முறையில் அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி உடன் இணைந்த இலங்கை துறைமுக அதிகார சபையின் வர்த்தக தொழிற்சங்கமொன்றும் இன்றைய தினம் அம்பாந்தோட்டையில் எதிர்ப்பு பேரணியொன்றை நடத்த திட்டமிட்டிருந்தது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீதமான பங்குகளை சீனத் துறைமுகத்திற்கு வழங்குவதற்கு எதிராகவே இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு பிறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இந்.மீனவர்கள்...

இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து 2 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை இலங்கை கடல் எல்லையில் வைத்து கைது செய்யப்பட்டு மன்னார் தாழ்வுபாடு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளினூடாக மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த 12 இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபரின் பரிந்துரை மன்னார் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்ற நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளினூடாக இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# வாள்வெட்டு சம்ப...

இந்நிலையில் குறித்த இச் சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸார் மேலும் குறிப்பிட்டதாவது,

கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் சில்லாலை சாந்தை எனும் இடத்தில் வாள்வெட்டு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. துடுப்பாட்ட விளையாட்டு போட்டிக்காக சென்ற இரு குழுக்களிடையே இம் மோதல் சம்பவ்ம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினரால் இளவாலை பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இதன் காரணமாக நேற்றைய தினம் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதில் வாள்வெட்டுக்களுடன் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஐந்து சந்தேகநபர்களும் சட்டவிரோதமான முறையில் வாளினை உடைமையில் வைத்திருந்தவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியிருந்த நிலையில் அவர்கள் ஆறு பேரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

# யாழ்.பல்கலைக்...

ரத்து 151 மாணவர்கள் பட்டம்பெறவுள்ளதாக யாழ்.பல்கலைகழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு நிகழ்வு தொடர்பாக நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக துணைவேந்தர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு நிகழ்வானது இம் மாதம் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைகழகத்தில் இடம்பெறவுள்ளது. பட்டமளிப்பு நிகழ்வில் 2ஆயிரத்து151 மாணவர்கள் பட்டதாரிகளாக பட்டம்பெறவுள்ளனர்.

இதன்படி 164 மாணவர்கள் பட்டபின் தகைமை சான்றிதழை பெற்றுக்கொள்ளுவதுடன், ஆயிரத்து 275 மாணவர்கள் உள்ளக மாணவர்களாக பட்டம் பெற்றுக்கொள்ளவுள்ளனர். அதேபோன்று 484 மாணவர்கள் வெளிவாரி பட்டதாரிகளாக பட்டம்பெறவுள்ளதுடன் 32மாணவர்கள் டிப்ளோமா பட்டதாரிகளாக பட்டம்பெறவுள்ளனர்.

மேலும் இப் பட்டமளிப்பு நிகழ்வுகளானது இரண்டு தினங்களாக ஒன்பது அமர்வுகளாக நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் முதல் நாள் முதல் அமர்வானது காலை 9மணிக்கும் 2ஆவது அமர்வு 10.30மணிக்கும் 3ஆவது அமர்வு 11.30மணிக்கும் 4ஆவது அமர்வு பிற்பகல் 2மணிக்கும் 5ஆவது அமர்வு 3.30மணிக்கும் நடைபெறவுள்ளன. இதேபோன்று இரண்டாம் நாள் அமர்வானது காலை 9மணிக்கும் 2ஆவது அமர்வு முற்பகல் 10.30 மணிக்கும் 3ஆவது அமர்வு பிற்பகல் 1.30மணிக்கும் 4ஆவது அமர்வு 3மணிக்கும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றைவிட இப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோர் தொடர்பான விபரங்கள் உட்பட மேலதிக தகவல்களை பெறவிரும்பின் அவர்கள் யாழ்.பல்கலைகழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். இதில் முதுகலை பட்டப்படிப்பு/பட்டய படிப்பில் (postgraduate degrees/Diplomas), கலாநிதி-03 ,முது மெய்யியல்மாணி-15, முது கல்விமாணி- 102, தமிழில் முதுமாணி-40, குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறியியல் பட்டப்படிப்பின் தகைமை சான்றிதழ்-01, சுகாதார முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணி-02, நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பின் தகைமை சான்றிதழ்- 01, ஆகியனவும்,

இளங்கலைமாணி பட்டப்படிப்பில் (undergraduate degrees), வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி- 104, சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி- 32, சட்டமாணி- 50, விவசாய விஞ்ஞானமாணி-49, தொழில் நிர்வாக மாணி (நான்கு வருடம்) -248, தொழில் நிர்வாகமாணி (மூன்று வருடம்) - 11, வர்த்தகமாணி (மூன்று வருடம்)-03, விஞ்ஞான மாணி (பொது)- 79, விஞ்ஞான மாணி( சிறப்பு)-89, கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி- 12, பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி-15 , கணணி விஞ்ஞானமாணி-01, கலைமாணி (பொது)- 116, கலைமாணி (சிறப்பு)- 268, நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்)- 79, நுண்கலைமாணி (வயலின்)-02 , நுண்கலைமாணி (வீணை)-01 , நுண்கலை மாணி (நடனம்-பாரதநாட்டியம்)-58 , நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்)-28 , தாதியல் விஞ்ஞானமாணி- 10, மருந்தகவியல்மாணி- 06, மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானமானி-16, ஆகியனவும்,

வவுனியா வளாகத்திலிருந்து, வியாபர முகாமைத்துவமாணி(பொது)-27 . வியாபரா முகாமைத்துவ மாணி(சிறப்பு)- 88, விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும் (பொது)- 14, விஞ்ஞானமாணி சிறப்பு கணணி விஞ்ஞானம்- 05, விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது)- 18, விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (சிறப்பு)- 06, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப இளமாணி (பொது)-24 , தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)-14, ஆகியனவும்,

வெளிவாரியாக(External), கலைமாணி-336, வணிகமாணி- 101, வியாபார முகாமைத்துவமாணி (இணையவழி)- 43, நடனமாணி-04, ஆகியனவும், பட்டய படிப்பாக (diploma courses), ஆங்கிலத்தில் தகைமை சான்றிதழ (விரிவாக்கல் நிகழ்ச்சி திட்டம்)-13, உடற்கல்வியல் தகைமை சான்றிதழ்-05, இதழியல் தகமை சான்றிதழ்- 14, ஆகியனவும் வழங்கப்படவுள்ளது என துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (செ-4)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில், A9 கண்டி வீதியில் 2பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் வேண்டாம்.

தொடர்புகளுக்கு :
076 708 7942,
075 048 4074

(7409)

## IBS

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்

கணக்கீடு

AP.பகீரதன் B.B.A (FM spl.)

A/L 2019

ஆரம்பம் இன்று 4 மணி

அனுமதிக் கட்டணம் இல்லை.
மாணவர் மீது தனிப்பட்ட கவனம்.

## Biology - 2019

Tamil and English Medium

K.Kalaivanan (Spl in. Biological Sciences)

English Medium
Monday, Wed, Fri - 6:00 - 7.15 PM

Tamil Medium
Sat and Sun - 6:00 - 7.15 PM

Royal academy - Jaffna
071 343 8442

(7411)

## V2 TRAVELS



குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-6930)

## சிங்கள வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து எழுத வாசிக்க பேச கற்பிக்கப்படும்.
O/L, அரச உத்தியோகத்தர்களுக்கான பரீட்சைக்கு ஏற்ற வகையில் கற்பிக்கப்படும்.
வகுப்புக்கள் ஆரம்பம்: 07.01.2017 இன்று காலை 10 மணி.

தொலைபேசிஇல. 0212228148
0778464721
0215689477

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

(சி-7116)

## போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்

- அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் - தரம் -III
- சட்டமாணி - (LLB)
- வங்கியல்
- காணி வெளிக்கள போதனாசிரியர்

ஆரம்பம் - 08.01.2017 ஞாயிறு 9 AM
சனி, ஞாயிறு - 9.00 - 12.00 PM
மேலதிக தொடர்பு : 077 217 0065

ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி

(7393)

## வெளிநாடுகளுக்கான துரித பிரதிகள் சேவை

SATISFACTION 100% GUARANTEED

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

## யாழ் மதர் கெயார் Dental Unit



Reg.No.#PV85754

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள் தற்போது யாழ் நகரில்







- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769

(C-7119)

## DCM

தொழில்நுட்ப கல்லூரி - சுன்னாகம்

தொழில்நுட்பக் கல்விக்கு வலிகாமத்தின் தனித்துவமான ஒரே நிறுவனம்

A/L 2019 ஆரம்பம்

இன்று மாலை 3.00 மணிக்கு

| | |
|---|---|
| Science for Technology | T.நிரோஜன்<br>S.செந்தூரன்<br>J.கொலின்ஸ் |
| Bio Technology | R.விக்கி<br>S.நிரோஜன்<br>T.சிவகுமார் |
| Enginearing Technology | T.சிறிகரன்<br>S.சேவியர் |

## தொழில்நுட்பவியல்-2019

Bio-Tech
E-Tech

DMI
யாழ்.நகர்

- தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி
- Royal Examination Centerன் மாதாந்தப் பரீட்சை
- Multimedia ஊடான கற்பித்தல்

ஆரம்பம்:-07.01.2017 சனி
காலை 9.00AM

(சி-6821)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.